# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள NEWUTHAYAN.COM

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 114 | பங்குனி 07ஆம் நாள் | வியாழக்கிழமை | 21 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050


## தண்டனை விடுப்பு நிலை இலங்கையில் நீடிக்கிறது

### சிறுபான்மை மக்களுக்கு அது பேராபத்து என்று எச்சரித்தார் மிச்செல் பாச்லெட்

ஜெனிவா, மார்ச் 21

தண்டனை விடுப்புநிலை இலங்கையில் நிலவுகின்றமையால் சிறுபான்மை மக்கள்

>> 19

## ஐ.நா. பரிந்துரையை ஏற்றால் மட்டுமே இலங்கையுடனான உறவுகள் நீடிக்கும்

### ஐரோப்பிய ஒன்றியம் மிரட்டல் தொனி

ஜெனீவா, மார்ச் 21

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதற்கு ஐ.நா. சபையின் பரிந்துரையை இலங்கை செயற்படுத்த வேண்டும். இவை இடம்பெற்றால் மட்டுமே இலங்கையுடன் பன்னாட்டுச் சமூகம் கொண்டுள்ள

>> 19



- வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை
- போர்க் குற்றங்களில் ஈடுபடவேயில்லை
- மனிதப் புதைகுழி அறிக்கை சரியானது
- இராணுவத்தினரின் உரிமை பாதுகாக்கப்படும்

# ஐ.நா. அறிக்கையை மறுத்தது இலங்கை!

ஜெனீவா, மார்ச் 21

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பாக சமர்ப்பித்த உத்தியோகபூர்வ அறிக்கையின் பெரும்பாலான விடயங்களை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு நேற்று மறுத்தது.

>> 19

## தமிழர் தொடர்பில் கரிசனை உள்ளது

### இந்தியாவும் சொல்கிறது

ஜெனீவா, மார்ச் 21

இலங்கைத் தமிழர் பிரச்சினைகளை தீர்க்க அதிக கரிசனை கொண்டுள்ளோம். தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் இவ்வாறு தெரிவித்தது இந்தியா.

ஐ.நா. மனித உரிமைகள் பேர

>> 19

## ஆனல்ட்டுக்கு கொலை அச்சுறுத்தல்; யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட்டுக்கு அலைபேசி ஊடாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

>> 19

## படகு கவிழ்ந்ததில் 19 வயது இளைஞன் பரிதாபமாகச் சாவு



யாழ்ப்பாணம், மார்ச் 21

மண்டைதீவில் இருந்து நேற்றையதினம் கடற்தொழிலுக்காகச் சென்ற சமயம் படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 19 வயதேயான இளைஞன் பரிதாபமாக உயிரிழந்தார். குறித்த சம்பவத்தில் மண்டைதீவைச் சேர்ந்த யோன் அன்ரனி அன்ரனி டினேஸ் என்ற இளைஞனே அவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

>> 19

### ஜெனீவா வளாகத்தில்

## வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் சரத்வீரசேகர இடையே முறுகல்

ஜெனீவா, மார்ச் 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் நேற்றைய அமர்வின்போது ஜெனீவா வளாகத்தில் வடமாகாண ஆளுநர்

>> 19

## பன்னாட்டு விசாரணைக்கு மகிந்தவே அடித்தளமிட்டார்

### பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 21

'போர்க்காலத்தில் இடம்பெற்ற குற்றங்கள் நிரூபிக்கப்படுமாயின் நான் எந்தவொரு நீதிமன்றத்துக்கும் வந்து பதிலளிக்கத் தயாராக உள்ளேன்.

>> 19


தங்கப்பவுண் எனில், குறைந்த வட்டியில்
அதிக தொகை எம்மிடமிருந்து...

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

தற்போது தங்க பவுணிற்கு கெரட் 24
அதிக அடகுத் தொகை
ரூ. 48,000/-



அதேபோன்று
16%
குறைந்த வட்டிக்கு

சம்பத்
அடகுச் சேவை

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 30 30 50
www.sampath.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## மகர ராசி அன்பர்களே!

எதிலும் திடமான முடிவெடுக்கும் மகர ராசி அன்பர்களே! உங்களுக்கு 13.2.19 முதல் 31.8.20 வரை உள்ள காலகட்டத்தில் ராகுவும் கேதுவும் அதிர்ஷ்டங்களையும் திடீர் திருப்பங்களையும் வழங்கப்போகிறார்கள்.




**ராகு பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்கள் ராசிக்கு ஏழாவது வீட்டில் நின்றுகொண்டு, எதிலும் ஈடுபாடு இல்லாமல் உங்களை எந்த ஒரு வேலையையும் செய்ய விடாமல் முடக்கி வைத்திருந்தார் ராகு. தாழ்வு மனப்பான்மையையும், மன உளைச்சலையும், வீண் கவலைகளையும் தந்த ராகுபகவான், இப்போது உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் வந்து அமர்கிறார்.

ஆகவே, இனி எதிலும் எல்லாவற்றிலும் முன்னேற்றம்தான். சந்தேகத்தால் பிரிந்திருந்த கணவன் - மனைவி ஒன்றுசேர்வீர்கள். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் நீங்கி நிம்மதியும் அமையும் பிறக்கும். ஒருநாள்கூட நிம்மதியாக இருக்கமுடியவில்லையே என்று நினைத்துப் புழுங்கினீர்களே! கவலை வேண்டாம். இனி, குடும்பத்தில் சந்தோஷம் பிறக்கும். மனைவி பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவர்கள், உங்கள் பேச்சுக்கு மதிப்புக்கொடுப்பார்கள். மனைவி அடிக்கடி உடல்நலக்குறைவால் அவதிப்பட்டாரே, இனி அவரின் ஆரோக்கியம் கூடும்.

மறுமணத்துக்கு முயற்சி செய்தவர்களுக்குத் திருமணம் உடனே கூடி வரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும். வரவேண்டிய பணமெல்லாம் வந்து சேரும். கடன் பிரச்னை களில் ஒரு பகுதியைத் தீர்ப்பீர்கள். பழைய நகைகளை மாற்றிவிட்டு புதிய டிசைனில் ஆபரணங்களை வாங்குவீர்கள்.

தந்தைவழி சொந்தங்களிடையே மனஸ்தாபம் வெடித்ததே! அந்த நிலை இனி மாறும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும்.

உறவினர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். உங்களைப் பற்றித் தவறாக நினைத்தவர்களின் மனம் மாறும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளிடம் இருந்து வந்த மனக்கசப்பு, கோபம் எல்லாம் நீங்கும். இனி உங்களின் அன்புக்கு கட்டுப்படுவார்கள். வேலை தேடி அலைந்த உங்கள் மகனுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். மகளின் திருமணம் ஏதோ ஒரு வகையில் தடைப்பட்டுக் கொண்டிருந்ததே... இனி தடைகள் நீங்கி, நல்ல இடத்திலிருந்து வரன் அமையும். கல்யாணத்தைச் சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு மறதி, மந்தம் விலகும். தடைப்பட்டக் கல்வியை மீண்டும் தொடருவீர்கள். நல்லவேலை கிடைக்கும். கல்யாணம் கூடி வரும். விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் சேரும். அரசியலில் தடைகள் நீங்கும் வெற்றிப்பாதை புலப்படும். வியாபாரத்தில், மற்றவர்களின் ஆலோசனையால் நீங்கள் இழந்தது கொஞ்சநஞ்சமில்லை. இனி பழைய தவறுகள் நிகழாத வண்ணம் பார்த்துக்கொள்வீர்கள். புது அணுகுமுறையால், விளம்பர யுக்தியால் லாபத்தைப் பெருக்குவீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.



மருந்து வகைகள், எண்ணெய் வித்துக்கள், ஏற்றுமதி இறக்குமதி வகைகளால் ஆதாயம் அடைவீர்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

உத்தியோகத்தில், உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து வந்த மேலதிகாரி இனி கனிவாகப் பேசுவார். சக ஊழியர்களும் உங்களிடம் நட்புப் பாராட்டுவர். உங்களின் யோசனைகளும், திட்டமிடலும் பாராட்டு பெறும். இழந்த சலுகையை மீண்டும் பெறுவீர்கள். கணினித் துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும்; விடாமல் பற்றிக்கொள்ளுங்கள். கலைத்துறையினருக்கு, இதுவரை இருந்துவந்த வீண் கிசுகிசுத் தொல்லைகள், வதந்திகள் ஆகியவை மறையும்.

**கேது பகவான் அருளும் பலன்கள்**

இதுவரை உங்களின் ராசியிலேயே அமர்ந்து உடல் சோர்வு, காரியத்தடைகள், மன உளைச்சல், விரக்தி, சோம்பல் என அடுக்கடுக்காக பிரச்சினைகளைக் கொடுத்து வந்த கேது இப்போது பன்னிரண்டில் சென்று அமர்கிறார்.

உங்கள் பேச்சில் இனி தெளிவு பிறக்கும். மருந்து, மாத்திரையுடன் குடித்தனம் நடத்தினீர்களே! இனி உடல் ஆரோக்கியம் மேம்படும். அடிக்கடிக் கோபப்பட்டு வீண் வம்பில் சிக்கிக் கொண்டீர்களே, இனி சாந்தமாகப் பேசும் அளவுக்குப் பக்குவப்படுவீர்கள்.

கல்யாணம் காட்சியில் கலந்து கொள்ளா மலும் எதிலும் பிடிப்பில்லாமலும் விரக்தியுடன் இருந்தீர்களே! இனி எல்லாவற்றிலும் ஆர்வம் பிறக்கும். குடும்பத்தில் நல்லது நடக்கும். பிள்ளைகளின் கூடா பழக்கவழக்கங்கள் விலகும். மகனுக்குத் தடைப்பட்ட திருமணம் முடியும்.

சகோதர சகோதரி வகையில் அலைச்சல் இருந்தாலும் மகிழ்ச்சி குறையாது. சொத்து சம்பந்தப்பட்ட பிரச்னைகள் தீரும். போதிய உறக்கம் இல்லாமல் தவித்த நீங்கள் இனி ஆழ்ந்து உறங்குவீர்கள். உடலில் சேர்ந்த கெட்ட நீரெல்லாம் வடிந்து, உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

வியாபாரத்தில், பற்றுவரவு உயரும். வேலையாள்கள் உங்களிடம் விசுவாசமாக நடந்துகொள்வார்கள். பங்குதாரர்கள் உங்களின் ஆலோசனைகளுக்கு ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் எல்லோராலும் மதிக்கப் படுவீர்கள். அலுவலகப் பிரச்னைகள் நீங்கி நிம்மதி பிறக்கும். நீங்கள் விருப்பப்பட்ட இடத்துக்கே இடமாற்றம் உண்டு. வெகுநாள்களாக இழுபறியில் இருந்த சம்பள உயர்வும், பதவி உயர்வும் இனி தேடி வரும்.

மொத்தத்தில் இந்த ராகுகேதுப் பெயர்ச்சி, உங்களின் அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தருவதாக அமையும். சனிக் கிழமைகளில் பெருமாளுக்குத் துளசி அணிவித்து வழிபட்டு வாருங்கள்; வெற்றிகள் குவியும்.

(தொடரும்)



# 12 ராசியின் லக்கினமும் ஏற்படும் உயிரிழப்பும்

(நேற்றைய தொடர்ச்சி...)

**ஜாதகத்தில் லக்கினத்தின் முக்கியத்துவத்தை நாம் அறிவோம். லக்கினம் என்பது ஜாதகத்தில் முதல் வீடாகும். இது ஜாதகரின் குணாதிசயத்தை நிர்ணயிக்கிறது. பன்னிரு லக்கினத்தில் பிறந்தவர்களின் பொதுவான பலன்களை இங்கு காணலாம்.**

**கடக லக்கினம்**

கடக லக்கினத்தில் பிறந்தவர்கள் வாக்கு வன்மையுடன் சாமர்த்தியமாக பேச வல்லவர்கள். பென்னசையுடயவர்களாதலால் விலை மாதர் நட்பு உடையவர்கள். சிவந்த நிறமும் கொண்டவர்கள், செல்வந்தர் நவதானிய வியாபாரம் லாபம் தரும் தொழிலாகும். குருவே தெய்வமென போற்றுவார். நீர், கடல் சம்பந்தமான தொழில் செய்வர். ஹோட்டல், உணவு சம்பந்தமான தொழிலும் செய்வர். 5,16,20,25,40 வயதில் கண்டம் உண்டாக லாம். இவர்கள் மாசி மாதம் வளர்பிறை பஞ்சமி திதியில் மிருகசீரிச நட்சத்திரத்தில் புதன்கிழமை உயிரிழப்பார்கள்.

**சிம்ம லக்கினம்**

இந்த லக்கினத்தில் பிறந்தவர்கள் உணவில் தீராத ஆசையுடயவர்கள், அர்ச்சகராக வேதம் ஓதுபவர்களாக தொழில் புரிவார்கள், தர்மகுணம் கொண்டவர்கள், சுய தொழில் செய்வதில் ஆர்வமுள்ளவர்கள், கடுகடுப்பும் சினமும் வெளிப்படும் தோற்றம், அரச யோகத்தை குறிக்கும் சாமுத்ரிகா லக்ஷணங்களை உடையவர். தன் மதிப்பும் கெடாமல் பார்த்து கொள்வார், சுதந்திர உணர்வுகள் அதிகம், சங்கீதம், நாடகம், , அரசு துறை உத்தியோகம் அமையலாம். 5,10,27,30 வயதுகளில் காய்ச்சல் ஏற்பட்டு குணமாகலாம். இவர் பங்குனி மாதம் தேய்பிறை பிரதமை (அல்லது பௌர்ணமி) திதியில் அஸ்த நட்சத்திரத்தில் வெள்ளிகிழமை பகலில் உயிரிழக்கலாம்.

**கன்னி லக்னம்**

ஆசார சீலர், தர்ம குணமுடையவர், இறக்க மனப்பாங்குடையவர், பல தொழில் செய்பவர், செல்வ நிலையில் ஏற்ற இரக்கமுடையவர். இளமையில் கஷ்டபடுபவர். வாதம், பித்தம், சிலேத்துமம் மூன்றும் கலந்த நோய் ஏற்படக்கூடும். காலில் மறு இருக்கும். கலை, இலக்கியம், எழுத்து, இசை இவற்றில் வல்லவர், வழக்காடி வெற்றி பெறுவதில் நிபுணர், விஞ்ஞானம், கணிதம், ஜோதிடம் இவற்றில் வல்லவர். மருத்துவம், சமய சொற்பொழிவு இவற்றில் ஈடுபாடு உண்டு. சமய ஈடுபாடும், தளவழிபாட்டு ஈடுபாடும் உண்டு. பெட்டிக்கடைகள், தொழில் செய்பவர். புத்தக வெளியீட்டாளர், விற்பனையாளர், ஆவண பதிவாளர், காரியதரிசி, பங்கு சந்தை நிபுணர்.

விஷ காய்ச்சல், வாயிற்று கோளாறு, அல்சர் போன்ற நோய்கள் எளிதில் பற்றிகொள்ளும். 5 வயதில் நெருப்பாலும், 10 வது வயதில் காய்ச்சலாலும், 18 வது வயதில் அம்மை நோயாலும் கண்டம் ஏற்படும். வைகாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி திதியில் சித்திரை நட்சத்திரத்தில் வயிற்றில் ஏற்படும் நோயால் உயிரிழப்பு ஏற்படலாம்.

**துலாம் லக்னம்**

இனப்பற்று மிக்கவர், செல்வந்தர், அரசு துறை வேலை வாய்ப்பு பெறுவார். அலங்கார பொருள்கள், வாசனை திரவியங்கள் இவற்றின் மேல் ஆசையுடையவர்கள். இரண்டு திருமணம் நடைபெற வாய்ப்புள்ளது. தெய்வ பக்தி உள்ளவர். கலை, இசை, நாடக நடனம் இவற்றில் அதிக தேர்ச்சி பெறுவார். கற்பனை திறன் அதிகம். இடுப்பு பகுதியில் நோய், நீரிழிவு நோய் இவற்றால் பாதிக்கப்படலாம். 7 வது வயதில் வியாதியாலும், 12 வது வயதில் நெருப்பாலும், 19 வது வயதில் அம்ம்மை நோயாலும், 28 வது வயதில் பகைவர்களாலும், 48 வது வயதில் தண்ணீராலும் கண்டம் ஏற்படும். கார்த்திகை மாதம் வளர்பிறை சஷ்டி திதியில் ஞாயிற்றுகிழமை சூரிய உதயத்தில் உயிரிழப்பார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாணந்துறை திக்கல பகுதியில் சிங்களவர் முஸ்லிம் மோதல்

கொழும்பு, மார்ச் 21

பாணந்துறை சரிக்கமுல்ல திக்கல பகுதியில் வாகன விபத்துச் சம்பவம் ஒன்றையடுத்து முஸ்லிம் இளைஞரின் வீடுமீது சிங்களவர்க ளால் தாக்குதல் நடத்தப்பட்டது என்;று நேற்று நள்ளிரவு சமூக வலைத்தளங்களில் தகவல் பரவியது. மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலி, நாடாளுமன்ற உறுப்பினர் பௌசி ஆகியோர் பிரச்சினையில் தலையிட்டதை அடுத்தும், தலைமை அமைச்சரின் பணிப்பின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப்படை களமிறக்கப்பட்டதைத் தொடர்ந்;தும் நிலமை கட்டுக்குள் கொண்டுவரப் பட்டது என்று அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

(ம-22)

## மரண அறிவித்தல்

# தம்பித்துரை அம்பிகைபாகன்



தோற்றம் 30.06.1939 மறைவு 20.03.2019

கொழும்பைப் பிறப்பிடமாகவும் 62, முதலி கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை அம்பிகைபாகன் நேற்று (20.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - மங்கையற்கரசி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - கனகம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் ராஜாராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருணபாலனின் சகோதரனும் ரட்ணகுமார், பாலகுமார், ஆனந்தரூபினி (லண்டன்), ரவீந்திரகுமார், துளசிதா, காலஞ்சென்ற பருந்தாமன் மற்றும் ரிஷிகேஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகலக்ஷ்மி, சோபா, சந்திரகலா, ராஜேஸ்வரன், பிரசாத் ஆகியோரின் மாமனாரும் கிருஷிகா, பானுஷிகா, கீர்த்தனா, தனுஷன், றொஷான், கிருஷாந்தன், அக்ஷனா, சதுயா, திவ்யா, மயூரிகா, விதுஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தாவடி தெற்கு, கொக்குவில்.

(CS 23436/13/17)

# நான்தான் பெரியவன்!

காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. தன் வலிமையை நினைத்து அது தற்பெருமை கொண்டிருந்தது. வழக்கம் போல வேட்டையாடிவிட்டுக் குகைக்குத் திரும்பியது. அங்கேயே படுத்து ஓய்வு எடுத்தது. அப்போது கொசு ஒன்று அதன் அருகே பறந்தது. அந்தக் கொசுவையும், தன்னையும் ஒப்பிட்டுப் பார்த்தது அது.

"இறைவா! எதற்கும் அஞ்சி நடுங்கும் சின்னஞ்சிறு கொசுவாக என்னை நீ படைக்கவில்லை. எல்லாரையும் நடுங்க வைக்கும் சிங்கமாகப் படைத்து உள்ளாய். உனக்கு நன்றி!" என்ற உரத்த குரலில் சொன்னது. அப்படி அது பேசியது கொசுவின் காதில் விழுந்தது. இதனால் கோபம் கொண்ட கொசு, "சிங்கமே! கொசுக்களாகிய நாங்கள் உன்னைவிட வலிமையானவர்கள். இதை அறிந்து அடக்கமாகப் பேசு!" என்றது. இதைக் கேட்ட சிங்கம், "அற்பக் கொசுவே! யாரிடம் என்ன பேச்சுப் பேசுகிறாய்? நான் ஒரு அறைவிட்டால் உன் கூட்டமே அழிந்து போய்விடும். இங்கிருந்து ஓடினால் உயிர் பிழைப்பாய். இல்லையேல் உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது!" என்று கண்கள் சிவக்கச் கர்ச்சித்தது. அதற்குக் கொசு, "சிங்கமே! நம் இருவரில் யார் வலிமையானவர்? சண்டை போட்டு முடிவு செய்வோம்!" என்று வீரம் பேசியது. "நீ என்னுடன் சண்டைக்கு வருகிறாயா? வா. உன்னை ஒரு நொடிக்குள் நசுக்கிக் கொன்றுவிடுவேன்!" என்று கர்ச்சித்தது அது. கொசு வேகமாகப் பறந்து வந்து சிங்கத்தின் முகத்தில் கடித்தது. உடனே அது தன் முன்னங்கா லால் முகத்தில் வேகமாக அறைந்தது. கவனமாக இருந்த கொசு அதன் அறையில் இருந்து தப்பித்தது. பிறகு பறந்து பறந்து அதன் உடலெங்கும் கடித்தது. இப்படிக் கொசு கடித்த போதெல்லாம் தன்னை அறைந்து கொண்டது சிங்கம். அந்தக் கொசு சிக்கவே இல்லை. திறமையாகத் தப்பித்துக் கொண்டே இருந்தது. இதனால் சிங்கத்தின் உடலெங்கும் காயம் ஏற்பட்டுச் சோர்வு அடைந்தது. கொசுவோ மீண்டும் மீண்டும் பறந்து அதைக் கடித்தபடி இருந்தது. வேறு வழியில்லாத சிங்கம், "கொசுவே! என் தோல்வியை ஒப்புக் கொள்கிறேன்!" என்றது. "இனி யாரையும் எளியவர் என்று கேலி செய்யாதே!" என்ற கொசு அங்கிருந்து பறந்து சென்றது.

## மரண அறிவித்தல்



# தாமோதரம்பிள்ளை சிவலிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் உடுவில் மற்றும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை சிவலிங்கம் 19.03.2019 செவ்வாய்க்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கொட்டடி வளவு,
உடுவில், சுன்னாகம்.

(cs.24148) (13.17)

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# பொன்னையா சபாரத்தினம்



நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சபாரத்தினம் நேற்று (20.03.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகம்மா (கமலா) வின் அன்புக் கணவரும் குமாரசாமி, பொன்இரத்தினம் ஆகியோரின் சகோதரனும் சௌந்தராஜன் (சுவிஸ்), நிர்மலராஜன் (சுவிஸ்), முரளிதரன் (கனடா), ஞானச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மோகனாம்பிகை (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), சாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் செந்தூரன், றிஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 3.00 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி சாந்திமலர்(ரதி) சுரேஸ்குமார்

(ஓய்வு பெற்ற நூலக உதவியாளர் - வலி வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை)

யாழ் மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சிறுவிளான், இளவாலையை வசிப்பிடமாகவும் ஆவுஸ்திரேலியா Sydney ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சாந்திமலர் சுரேஸ்குமார் 18.03.2019 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ் - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் சிறுவிளான் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலசுப்பிர மணியம் - சகுந்தலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் சுரேஸ்குமாரின் அன்பு மனைவி யும் ஐஸ்வரியாவின் அன்புத் தாயாரும் ஸ்ரீராம் இன் அன்பு மாமியும் சந்திரமலர்(பபி Sydney), மகேந்திரன்(Sydney) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானசுந்தரம்(Sydney), சாரதா தேவி(Sydney), சுசிகலா(Sydney) காலஞ்சென்ற சசிகலா மற்றும் சூரியகுமார், சிவகுமார்(சிவம் போட்டோ சுன்னாகம்), சந்திரகுமார்(கனடா), சூரியகலா(கனடா), சக்திகலா(கனடா), செந்தில்கு மார்(Sydney) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (20.03.2019) புதன்கிழமை 6.30pm - 8.30pm Guardian Minchinbury Chapel இல் பார்வைக்காக வைக்கப்பட்டு இன்று (21.03.2019) வியாழக்கிழமை இறுதிக்கிரியைகள் பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக Pine Grove Crematorium, Kington St, Minchinbury NSW 2770, Australia இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகுமார்**
**சோதி வீதி, காங்கேசன்துறை.**
**077 379 2318/071 8839568**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**ஐஸ்வர்யா - மகள் : +61430208484 / ஸ்ரீராம் - மருமகன் : +61435607262**
**சிவஞானசுந்தரம் - மைத்துனர் : +61405227578**
**செந்தில்குமார் - மைத்துனர் : +61431243639**

## கண்ணீர் அஞ்சலி

மன்றத்தின் வெள்ளிவிழா கண்ட உறுப்பினர்

### க. கதிர்காமநாதன்

(உரிமையாளர் - K.S.K.Motors சாவகச்சேரி)

அவர்கள் 18.03.2019 அன்று காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.


(ஞ 96871) (13.17) **சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

விளம்பர தொடர்புகளுக்கு உதயன் advt@uthayan.com, 021 493 1111

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் வேலும்மயிலும்

*(ஓய்வு பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் - வவுனியா மற்றும் யாழ்மாவட்டச் செயலகங்கள்)*



"அப்பாவளவு" மல்லாகத்தைப் பிறப்பிட மாகவும் பலாலி வீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் வேலும்மயிலும் நேற்றுமுன்தினம் (19.03.2019) செவ்வாய்க்கிழமை இறை வனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினம் - தங்கச்சியம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் நாகநாதர் - புஷ்பகாந்தி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற புனிதவதியின் அன்புக் கணவரும் சேந்தனின் (விரிவுரையாளர் - ஆசிரிய கலா சாலை கோப்பாய்) அன்புத் தந்தையாரும் ராஜினி (ஆசிரியர், யா/இணுவில் மத்திய கல்லூரி) அன்பு மாமனாரும் ஆதிரை, ஆவகன், ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற அங்கயற்கரசி மற்றும் அன்னலட்சுமி, சிவசோதி காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீபுஷ்பநாதன், கமலேந்திரன் மற்றும் சாம்பசிவமூர்த்தி, சத்தியசிவசொரூபினி மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், தர்மாவதி மற்றும் பத்மாவதி, கௌசலாதேவி, சத்தியநாதன் மற்றும் காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"குருவருளகம்",**
**3ஆவது ஒழுங்கை,**
**பலாலி வீதி, திருநெல்வேலி.**
**077 971 0730, 077 977 3414**


(cs.23784)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### மோகன்ராஜ் லக்சன் (சாளி)

(லக்சன் ரான்ஸ்போட் உரிமையாளர் - வவுனியா)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.03.1989 | 18.03.2019 |

யாழ்ப்பாணம் திருநெல்வேலி, பால்பண்ணையை பிறப்பிடமாகவும் வவுனியா தேக்கம் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. திருமதி மோகன்ராஜ் சாந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் லக்சன் 18.03.2019 திங்கட்கிழமை அகாலமரணடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சரஸ்வதி காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம் லில்லிஞானம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் சிவநந்தினி (சுபா)வின் அன்புக் கணவரும் டேனிஷா, திசாந், நிலிசா, கிசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரத்தினம் காலஞ்சென்ற வாசுகி ஆகியோரின் அன்பு மருமகனும் நாகராஜன் லக்சனா (சூட்டி) வவுனியா நகரசபை உறுப்பினர், சுதாகரன் (சனா - கராஜ் தாண்டிக்குளம், வவுனியா) சுகேந்தன் (அனு)சாரதி கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், வவுனியா), விமல்ராஜ் (விமல் - Feel Free வாடகை கார் உரிமையாளர் - வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இந்திரன் (ஜேர்மனி), ரகுபதி இந்திரன் (பிரான்ஸ்), நகுலேந்திரன் (ஜேர்மனி), தெய்வேந்திரன் (யாழ்ப்பாணம்), ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும் சரோஜினிதேவியின் (பிரான்ஸ்) பொறாமகனும் சிவதீபன் (தீபன்), நிசாந்தினி, நாகராஜன் (செயலாளர், உதைபந்தாட்ட சம்மேளனம் வவுனியா மாவட்டம்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.120 A.கண்டி வீதி,**
**தேக்கம் தோட்டம், வவுனியா.**

(CS 00499)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 617 8275**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் விழா ஒழுங்கமைப்பு நிலையத்திற்கு உதவியாளர்கள் தேவை. அடிப்படை சம்பளம் 15.000/=. மேலதிக கொடுப்பனவு உண்டு. வயது 18 - 30 உட்பட்ட ஆண். யாழ் நகரை அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

(CS 24149) (14.17)

**077 201 8833**

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று வியாழக்கிழமையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை வரை (21.22.23) ஆகிய திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி. 2 ஆம் ஒழுங்கை. திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.

**24.03.2019** அன்னதானம் வழங்கப்படும்.

அடியவர்கள் வந்து இறையருள் பெற்றுச்செல்க.

**அருள்வாக்கின் மூலம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாட்டு பயணத்தடை, குழந்தை பேறு, குடும்பப்பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.**

**பூஜை நேரம் - காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

குறிப்பு - கலாசார உடையுடன் வருகை தரவும்.

தொடர்பு - 021 221 9127, 077 801 2226

## புத்தக வெளியீடு - அடிப்படை இலத்திரனியல்




"அடிப்படை இலத்திரனியல்" என்ற இந்நூலானது பௌதிகத்தைக் கற்கின்ற க.பொ.த. (உயர்தர) மாணவர்கள், கற்பிக்கின்ற ஆசிரியர்கள், மின்சார மற்றும் இலத்திரனியல் சார்ந்த தொழினுட்ப கற்கைநெறிகளில் பயில்கின்ற மாணவர்கள் என்பவர்களுக்காக புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்புள்ளதாக ஆழமாகவும், விரிவாகவும், எளிதில் புரியக்கூடிய விதத்திலும் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

பிரதிகளைப் பெறுவதற்கு:
071 801 5371 அல்லது 077 636 9416 என்ற கைத்தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

## நாஹறா மருத்துவ நிலையம்

எலும்புகளைக் கரைத்து பாதிப்படையச் செய்யும் வாதம் முழங்கால் வாதம், பாரிசவாதம், மூட்டுக்கள் இசிவு ஆஸ்மா - குணப்படல்

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி, மானிப்பாய். (ஜெகபதி வீடு)
077 321 2740

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 39 வயது உடைய சொந்தமாக தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.

(CS 24154/15/17) **தொடர்பு - 077 905 8615**

## தவறிவிட்டது

இராஜவீதி. சிறுப்பிட்டி மேற்கு. நீர்வேலியைச் சேர்ந்த கனகசிங்கம் வேழவேந்தன் என்பவரின் மோட்டார் சைக்கிளின் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய வாகன பத்திரங்கள். வங்கி ATM என்பன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

(CS 24140)(04.17)

**077 712 2590 (கண்ணன்)**

## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள புகைப்பட அச்சக நிலையம் ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். யாழ். நகரை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

(C 9689/15/17) **தொடர்பு - 0777 550008**

## வேலையாள்கள் தேவை

194, யாழ். வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள மிக்ஷர் உற்பத்தி செய்யும் எமது நிறுவனத்திற்கு பொதியிடல் வேலைக்கு பெண்கள் தேவை.

(CS 24152/15/17) **தொடர்பு - 076 640 3388**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.

தொடர்பு - Lion Distributor
K.K.S. வீதி, சுன்னாகம், யாழ்ப்பாணம்.
(கொமர்ஷல் வங்கி முன்பாக)

# University of Jaffna

**Professor Sivapathasuntharam Mageswaran Memorial Lecture-2019**

*On*

" Hydrogen Energy "

| | | |
|---|---|---|
| Speaker | : | Professor R.M.G.Rajapakse, Department of Chemistry University of Peradeniya |
| Place | : | Kailasapathy Auditorium, University of Jaffna. |
| Date | : | 22.03.2019 |
| Time | : | 3.00p.m |

All are cordially invited.

**Registrar.**




357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி. 021 222 7432
esprintersjaffna@gmail.com, www.esprinters.com
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472

# SOLAR சிஸ்டம்ஸ்

- செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
- மின் கட்டணம் இல்லை

E Green Lanka
MICRO PC SYSTEMS
Micro Power Co Systems




| 2kW SYSTEM | 3kW SYSTEM | 5kW SYSTEM | 8kW SYSTEM | 12kW SYSTEM | 22kW SYSTEM | 33kW SYSTEM | 44kW SYSTEM |
|---|---|---|---|---|---|---|---|
| 350,000/= | 470,000/= | 750,000/= | 1,080,000/= | 1,480,000/= | 2,200,000/= | 3,300,000/= | 4,400,000/= |
| 240 Units | 360 Units | 600 Units | 950 Units | 1465 Units | 2640 Units | 3960 Units | 5280 Units |

## மின்சார தடை இல்லை No Power-Cut




## விவசாயிகளுக்கான மின்சாரம்




## SOLAR STREET GARDEN LIGHTS




44 kW — CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-

33 kW — CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-

22 kW — CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-

KACO Fronius SOLAX ENVERTECH victron energy REC JinKO Solar YINGLI SOLAR ReneSola

LECO Approved

சூரியகல மின் உற்பத்தி திட்டம்

ADB
- கூடிய வட்டிவீதம் - 8% வருடத்திற்கு
- அதிகூடிய மீள்செலுத்தும் காலம் - 10 வருடங்கள்
- நபரொருவருக்கு பொருத்தக்கூடிய அதிகூடிய கொள்ளளவு - 50kw

* நிபந்தனைகளுக்குட்பட்டது

கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284 / 077 3039536
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 6963274 / 077 3963281

வங்கிகளினூடான வட்டி 8% முதல்


மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 070409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com

No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.66B, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னம்மா தம்பையா



கரந்தன், நீர்வேலி மேற்கு நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தம்பையா நேற்று (20.03.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னதம்பி தம்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் தனலட்சுமி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற பரிமளம், ஞானசுந்தரம், ஞானசேகரம், செல்வராசா (கொலண்ட்), விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கதிரவேலு, தனலட்சுமி, காலஞ்சென்ற விஜயரத்தினம், காந்திமதி, சோதிமலர், இந்திரவதனி, சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு, நீர்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## ஆறுமுகம் நாகலிங்கம்



காரைநகர், களபூமி, விளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகலிங்கம் 19.03.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் -காசுபதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் சிவகாமிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் விமலரூபன் (கொழும்பு), யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தையாவின் அன்பு மைத்துனரும் மோகனசிறியின் அன்பு மாமனும் சரணின் அன்புப் பேரனும் நடராசா மகேஸ்வரி தம்பதிகளின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விளானை, களபூமி, காரைநகர்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 24143)(14.17)



பிறப்பு 28 . 06 . 1932

இறப்பு 19 . 03 . 2019

## திருமதி நகுலாவதி சின்னத்துரை

கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு, உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலாவதி சின்னத்துரை கடந்த (19.03.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, நவரத்தினம், மதியாபரணம் மற்றும் மகா ராஜா, K. லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜீவசோதீஸ்வரி, ஜீவகுணரஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தாயாரும் கந்தையா நாகராஜா, சுப்பிரமணியம் மகேந்திரவரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் லிங்கேஸ்வரன் றேமிதா, கங்கையமரன் - அபிராமி, சுதர்சன் - ஜெகந்தினி, அகிலன் - றம்மியா, திவானி - சதீஸ்பாலமுருகன், திவாகர் - கஜேந்தினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டிலுஜா, கிருஷாந், சிவானுஜா, சிரோமியா, வித்தகன், யஸ்வின், வைஸ்ணி, லதுரா, அஜந், ஆவகன், அட்ஷரன், அகானா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில் கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 02 . 1969

மறைவு 02 . 03 . 2018

### திருமதி உமாராணி விக்கினேஸ்வரன்

(சித்த மருத்துவர் - வைத்திய கலாநிதி, சித்த ஆயுள்வேத வைத்தியசாலை - வரணி)

திதி : பிரதமை

வருடங்கள் ஒன்றென்ன ஆயிரங்கள் சென்றாலும்
ஆறாது எம்மனம்
காலங்கள் நகரலாம் கண்ணீரும் கவலையும்
ஆறாது என்றும்
நிலையற்ற மனிதவாழ்வை முடித்து நித்தியமான
வாழ்விற்குச் சென்றீரே
என்றென்றும் உங்கள் நினைவுடன்
வாழ்ந்து வரும்

**கணவர், மகன் குடும்பத்தினர்.**

**மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.**

**077 814 5707**

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

## 12ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 27 . 03 . 1946

மறைவு 21 . 03 . 2007

### அமரர் முருகையா அன்னலட்சுமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது அன்பு தாயை
இந்நாளில் நினைவு கூர்ந்து அவரது ஆத்மா
நித்திய பேரின்ப பெருவாழ்வு அடைய இறைவனை வேண்டுகின்றோம்

**பன்னாலை, தெல்லிப்பழை.**

**மகள்**
**மு.வசந்தகுமாரி,**
**மு.சுகுமாரி**

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



தோற்றம் 14.10.1932

மறைவு 21.02.2019

### அமரர் பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

(தர்மகர்த்தா திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தானம் மண்டைதீவு)

கடந்த 21.02.2019 வியாழக்கிழமை சிவபதமடைந்த பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.03.2019) வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணம் 23.03.2019 சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**திருவெண்காடு, மண்டைதீவு-6**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கான ஆதரவு ஏன் என்று விளக்கவேண்டும் கூட்டமைப்பு!

சேரலாதன்




அரச தலைவரின் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக இந்த ஆட்சியில் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்குமென்ற நம்பிக்கை தகர்ந்து போயுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா கூறியுள்ளமை அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வருகின்றது கூட்டமைப்பு. இதன் காரணமாக அதன் அரசியல் எதிரிகளால் விமர்சனங்களையும் எதிர்கொண்டு வருகின்றது. குறிப்பாக புதிய அரசமைப்பு உருவாக்கப்படாமை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படுகின்றமை ஆகியன கூட்டமைப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் வரவு - செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பும் கூட்டமைப்புக்குச் சோதனையாக அமைந்துவிடுமென்பதையும் கூற முடியும். கூட்டமைப்பின் ஆதரவு இல்லாமல் வரவு - செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது அரசுக்கு முடியாத காரியமெனத் தெரிவிக்கப்படும் நிலையில் கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்றது என்பதை அறிந்துகொள்வதில் பலரும் ஆவலாக உள்ளனர்.

**ரணில் விரும்பினாலும் தமிழருக்கு தீர்வில்லை**

இப்போதுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்க விரும்பினாலும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்க முடியாத நிலையிலுள்ளார். அவரது நடவடிக்கைகளுக்கு மகிந்த அணியினர் மட்டுமல்லாது அரச தலைவரும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றார். புதிய அரசமைப்பின் உருவாக்கம் இடைநடுவில் கைவிடப்பட்டமைக்கும் இதுவே காரணமாகும். பதவியைப் பெறுவதற்காகப் படாதபாடுபட்டு வருகின்ற மகிந்த தமது இனத்தைச் சேர்ந்த மக்களைத் திருப்திப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இதனால்தான் தமிழர்களுக்கு எதையுமே வழங்கிவிடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக உள்ளார். கடந்த அரச தலைவர் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளால் தாம் தோற்கடிக்கப்பட்டதை அவர் மறந்தார் என்று தெரியவில்லை. ஆனால் தமிழர்களால் பதவியில் அமர்ந்த மைத்திரிபால சிறிசேனவும் மகிந்தவின் வழியில் ஏன் செல்கின்றாரென்பது புரியாத புதிராகவுள்ளது. அவரும் ஏனைய பெரும்பான்மையினத் தலைவர்களைப் போன்று நடந்துகொள்வதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.



இதேவேளை வரவு- செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு நாடாளுமன்றத்தில் இலகுவாக நிறைவேற்றி வைக்கப்பட்டது. கூட்டமைப்பும் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளமை குறிப்பி டத்தக்கது. வரவு செலவுத்திட்டம் இலகுவாகத் தோற்கடிக்கப்படுமென மகிந்த அணியினர் சவால் விட்டுக் கூறி வந்த நிலையில் அது இலகுவாக நிறைவேற்றப்பட்டமை அரசுக்கு எதிரானவர்களுக்கு நிச்சயமாக அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். இதேவேளை கூட்டமைப்பு மீண்டுமொரு தடவை அரசுக்குத் தனது விசுவாசத்தை எடுத்துக்காட்டியுள்ளது.

எதிராக வாக்களிக்குமாறு பல்வேறு அழுத்தங்கள் வழங்கப்பட்ட போதிலும் கூட்டமைப்பின் மொத்தமுள்ள 16 நாளுமன்ற உறுப்பினர்களில் 11 பேர் ஆதரவாக வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு அரசு என்ன கைமாறு செய்யப்போகின்றது என்பது தெரியவரவில்லை.

அரசியல் தீர்வு ஏற்படாது விட்டால் நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாதென கூட்டமைப்பின் தலைவர் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார். இது எப்பவோ தெரிந்த விடயமாகும். ஆனால் இனவாதிகளின் காதுகளுக்குள் இது போய்ச் சேருமா? என்பது தான் இன்றுள்ள கேள்வியாகும்.

**எதற்கெடுத்தாலும் எதிர்ப்பதும் தவறு**

எமது அரசியல் வாதிகளில் சிலர் எதற்கெடுத்தாலும் எதிர்ப்புத் தெரிவிப்பதையும் கண்டனக் கணைகள் தொடுப்பதையும் தமது வழக்கமாகக் கொண்டுள்ளனர். கூட்டமைப்பு அரசிடமிருந்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவு தெரிவித்து வருவதாக சி. வி.விக்னேஸ்வ ரன் கூறுகின்றார். அவர் கூட முதலமைச்சர் பதவியை வகித்த போது தமக்குக் கிடைக்க வேண்டிய வரப்பிரசாதங்கள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் அனுபவித்தவர் என்பதும் பதவி விலகுவதற்குச் சில தினங்களுக்கு முன்பாக கோடி ரூபா மதிப்பிலான சொகுசு வாகனமொன்றையும் தமக்கு வழங்குமாறு கேட்டார் என்பதும் மறந்து விடக்கூடிய விடயங்களல்ல.

விடுதலைப் புலிகளின் தலைவரான பிரபாகரன் ஆயுத மேந்தி அரசுக்கு எதிராகப் போரிட்டதன் காரணமாக எவருக்கும் அடிபணியாதவராகக் காணப்பட்டார். அப்போதைய இந்திய அரசாலும் அவரை விலைகொடுத்து வாங்க முடியவில்லை.

ஆனால் ஜனநாயக வழிமுறைகளைப் பின்பற்றுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் விட்டுக்கொடுத்துத்தான் செயற்பட வேண்டும். எதையுமே எதிர்த்துக் கொண்டிருப்பதால் இவர்களால் எதையுமே சாதித்து விட முடியாது. தற்போது உள்ள அரசியல் நிலவரங்களைக் கருத்தில் கொண்டும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு எதிர்கொண்டு வருகின்ற நெருக்கடிகள் தொடர்பாகவும் கூட்டமைப்பு நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றது. மகிந்த தரப்பு அரசைக் கவிழ்த்து விட்டு ஆட்சியைப் பிடிப்பதற்குத் துடிப்பதும் கூட்டமைப்புக்கு நன்கு தெரியும். மகிந்த ஆட்சியில் தமிழர்கள் எதிர்கொண்ட அவலங்களை எளிதில் மறக்க முடியுமா? ஆகவேதான் ரணில் அரசைக் காப்பதில் கூட்டமைப்பு அக்கறை காட்டி வருவதை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் இதை ஏற்றுக்கொள்வதற்கு கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் தயாராகவில்லை எந்த வகையிலாவது கூட்டமைப்பின் மீது களங்கத்தைச் சுமத்தி அதன் மக்கள் செல்வாக்கை இல்லாது செய்வதிலேயே அவை குறியாகச் செயற்படுகின்றன. தனது பக்கமுள்ள நியாயங்களை மக்களுக்குத் தெரிவிப்பதில் கூட்டமைப்பு இனியாவது முழு வீச்சில் செயற்படவேண்டும். இல்லையென்றால் கூட்டமைப்புக்கு எதிராக மற்றவர்கள் கூறுகின்ற குற்றச்சாட்டுக்கள் உண்மையென ஆகிவிடும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# குளிசைகளைக் கைகளால் தொட்டு நுகர்வோருக்கு வழங்கலாமா?

இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் நான் சென்ற போதெல்லாம் சில்லறைக்கு அன்றாட தேவைக்குரிய குளிசைகளை வாங்கும் பழக்கம் எனக்கு இருப்பது வழக்கம்.

ஒன்பது மாகாணங்களிலும் குளிசைகளை வாங்கும் போது கைகள் அளையாதவாறு பாதுகாப்பாகக் கரண்டிகளால் கையாண்டு தரப்படும் சந்தர்ப்பங்கள் ஒரு போதும் எனக்கு வாய்த்ததேயில்லை. சாப்பிடப்படும் குளிசைகள் கையாள்வதில் எந்தவித தப்பிதமும் இடம்பெறமுடியாது.

சொரியலாகவும் சில்லறையாகவும் குளிசைகள் வாங்கும்போது நூறுவீதம் கைகள் துப்புரவாக இருக்கும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லாத நிலையில் அந்தக் கைகளாலேயே குளிசைகளை வாங்கி நாம் கிருமிகளோடு உபயோகிப்பது நோயாளிகளுக்கு ஆரோக்கியமாக இருக்க முடியாது.

எனவே சொரியலாகக் குளிசைகள் வாங்கும்போது மருந்தாளர்கள் குளிசைகளைக் கையாள்வது பாதுகாப்பானதாகவும் அதேவேளை என்ன குளிசையென்று எழுதியும் கொடுக்க வேண்டும் என்பதையும் கவனத்தில் எடுக்கும் பட்சத்தில் நம்நாடு மேலும் சுபீட்சமடையும் என எதிர்பார்க்கலாம்.

*கே.எஸ்.சிவஞானராஜா*

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! [illegible] ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படையுங்கள்

மைத்திரி ரணில் கூட்டு 2015ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தது. அதற்கு முன்னர் ஆட்சியில் இருந்தது மகிந்த ராஜபக்ச. அவரது ஆட்சிக் காலத்தில் வடக்கில் எங்கும் படையினர் ஆக்கிரமித்து வைத்திருந்த நிலங்களை அரசுடமையாக்கி, படையினருக்கே கொடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரம் பெற்றிருந்தன. வலி. வடக்கில் மட்டும் 6284 ஏக்கர் காணிகளை அரசுடமையாக்கு வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கான அறிவித்தல் ஏப்ரல் மாதம் 2013ஆம் ஆண்டு விடுக்கப்பட்டது. இது தவிர யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலும் வன்னியின் பல்வேறு இடங்களிலும்கூட காணிகளைப் படையினருக்காக அரசுடமையாக்குவதில் கொழும்பு தீவிரம் காட்டிக்கொண்டிருந் தது.

இந்த நிலையில்தான் ஆட்சி மாற்றம் நடந்தது. அந்த ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தியதில் தமிழர்கள் முக்கிய பங்கு வகித்தார்கள். அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன கூறியதைப் போன்று, தேர்தலில் தோற்று அவர் சவக் குழிக்குள் செல்லாமல் காப்பாற்றியதிலும் தமிழர்கள் பெரும் பங்கு வகித்தார்கள். அந்தப் பங்கை வகிப்பதற்கு, தமிழ்க் கூட்டமைப்பின் வார்த்தைகளில் சொன்னால் மைத்திரிக்கும் தமிழர்களுக்கும் இடையில் மனங்களால் எழுதப்பட்ட ஒப்பந்தம் ஒன்று இருந்தது. அந்த ஒப்பந்தத்தில் முக்கியமானது, பொது மக்களின் காணிகளை அவர்களிடமே திருப்பி ஒப்படைப்பது.

மைத்திரி, ரணில், சந்திரிகா போன்ற தலைவர்கள் யாழ்ப்பாணம் வந்து இந்த வார்த்தைகளை ஓங்கி ஒலித்தார்கள். படையினர் அகற்றப்படுவார்கள், படை முகாம்கள் மூடப்படும் என்கிற வகையில் சொன்னால் அது தெற்கில் தமக்குப் பாதகமாகிவிடும் என்கிற அச்சம் காரணமாக அவர்கள் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்த வார்த்தைகள்தான் "மக்களின் காணிகள் அவர்களிடமே மீள ஒப்படைக்கப்படும்" என்பது.

இந்த வாக்குறுதியின்படி சில பல காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. படிப்படியாக அனைத்துக் காணிகளும் மக்களிடம் மீள ஒப்படைக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரியேகூடப் பல தடவைகள் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறியிருக்கிறார். ஆனால், அந்தப் பணிகள் காலஞ்செல்லச் செல்ல மந்தமடைந்தது. இப்போது அது தலைகீழ் மாற்றத்திற்குச் சென்றிருக்கிறது.

வலி. வடக்கில் மீண்டும் காணிகளை அரசுடமையாக்கி அவற்றை படையினருக்கும் வேறு நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தீவிரம் பெற்றிருக்கின்றன. நகுலேச்சரம், கீரிமலைப் பகுதிகளில் 232 ஏக்கர் காணியை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதேபோன்று காங்கேசன்துறையில் மத்திய பகுதியில் தற்போது தரைப்படை 'தல்செவன' என்ற பெயரில் ஆடம்பர விடுதி நடத்திவரும் இடத்தையும் அரசுடமையாக்கி தரைப்படையினருக்கே கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்தநிலங்கள் அனைத்தும் ஒன்றில் அரசதிணைக்களங்களுக்கோ அல்லது வைத்தியசாலைக்கோ அல்லது தனியாருக்கோ சொந்தமானவை. குறிப்பாக தல்செவன ஆடம்பர விடுதி அமைந்துள்ள இடம் வலி. வடக்கு பிரதேச சபையின் இளைப்பாறு விடுதியாக இருந்தது. படையினர் அதனை ஆக்கிரமித்து அதில் ஆடம்பர விடுதியை அமைத்துவிட்டு. அதனைத் தமக்கே. சொந்தமாக்கிக்கொள்ள நிற்கின்றகின்றன. கடற்படையினரும் அப்படியே!

இந்த நிலங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக அரசுடமையாக்கப்படவில்லை. படையினரின் வர்த்தகத்துக்காகவே அரசுடமையாக்கப்பட உள்ளன. அதிலும் பிரதேச சபையின் வருமான மையங்களாக இருக்க வேண்டிய இடங்களைத் தமது வருமான மையங்களாக மாற்றப் படையினர் துடிப்பது அவர்கள் இன்னும் தமிழர்களை இந்த நாட்டு மக்களாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றது. இல்லையேல் தமது விடுதிகளை பிரதேச சபையிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள் ஒதுங்கிக் கொண்டிருக்கவேண்டும். அது நடக்காமல் இருப்பது கவலைக்குரியது. இத்தகைய அணுகுமுறையே படையினர் மற்றும் கொழும்பு அரசு மீதான தமிழர்களின் சந்தேகங்களுக்கும் காரணமாக அமைகின்றது.

அதிலும் மக்களின் காணிகள் மக்களிடமே ஒப்படைக்கப்படும் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்களே மக்களின் காணிகளை அவர்களிடமிருந்து பிடுங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது கண்டனத்துக்குரியது; ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

காணி, நிலம் தமிழர்களோடு பின்னிப் பிணைந்தது. இந்த நிலத்திற்குத் திரும்புவதற்காக அவர்கள் 28 வருடங்களுக்கு மேலாகக் காத்திருக்கிறார்கள். அதனைப் புரிந்துகொண்டு செயலாற்றத் தவறின் மகிந்தவைப் போன்றே மற்றவர்களையும் எதிர்ப்பதற்கும் தமிழர்கள் தயங்கமாட்டார்கள்.

புதிய அரசமைப்பு, இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்ற விடயங்களில்தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லையாயினும் குறைந்தபட்சம் இதிலாவது அரச தலைவரும் தலைமை அமைச்சரும் காணி விடயத்திலாவது தமது வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களின் காணிகளை அவர்களிடமே ஒப்படைக்கவேண்டும்.



# இந்திய, சீனா நாடுகளின் போட்டிக் களமாக இலங்கை

இந்துமதி

இலங்கையின் அடுத்த அரச தலைவர் தொடர்பாக இந்தியா அதிக அக்கறை காட்டி வருவதாகக் கூறப்படுகின்றது. அண்மையில் இலங்கைக்கு இரகசியமாகப் பயணமொன்றை மேற்கொண்ட இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இந்த விடயம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து சென்றதாகவும் கூறப்படுகின்றது.

மகிந்த தரப்பில் கோத்தபாய களமிறங்குவதை இந்தியா விரும்பவில்லை. அவருக்குப் பதிலாக வேறொருவர் களமிறங்குவதையே அந்த நாடு விரும்புகின்றது. இறுதிப் போரின்போது கோத்தபாயவின் பங்களிப்பு முழு அளவில் இருந்தை இந்தியா நன்கறியும். இந்தப் போரில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். போர் இடம்பெற்றபோது இலங்கைக்கு இந்தியாவின் உதவிகள் பெருமளவில் கிடைத்ததால் இந்த உயிரிழப்புக்களுக்கு இந்தியாவும் காரணமாக இருந்ததாகத் தமிழ்மக்கள் கருதுகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள இன உணர்வாளர்களும் இதையே திரும்பத் திரும்பக் கூறி வருகிறார்கள். இது நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இந்தியாவுக்குத் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாது கோத்தபாய சீனாவின் தீவிர ஆதரவாளர் என்பதால் அவர் மீது இந்தியா வெறுப்பைக் கொண்டுள்ளமை வெளிப்படையான விடயமாயினும். இதன் காரணமாகவே அரச தலைவர் வேட்பாளராகக் கோத்தபாய களமிறங்குவதை இந்தியா விரும்பவில்லை. ஆனால் சீனாவை முற்று முழுதாக நம்பியிருக்கும் மகிந்தராஜபக்ச இந்தியாவின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். தமது அணியின் சார்பில் அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவுசெய்யும் சக்தியாக மகிந்தவே உள்ளதால் அவரது முடிவே இறுதி முடிவாக அமையப் போகின்றது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சஜித் பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராக நிறுத்தப்படுவதையே இந்தியா விரும்புகின்றமை அந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரின் மூலமாகத் தெரியவந்துள்ளது.

இந்தியப் படைகள் இலங்கையில் தங்கியிருப்பதை அறவே வெறுத்த சஜித்தின் தந்தையும் அரச தலைவர் பதவி வகித்தவருமான ஆர்.பிரேமதாச இந்தியப் படைகளுக்கு எதிராகப் போராடுவதற்குப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியதாக அப்போது கூறப்பட்டது. இந்த நிலையிலும் பிரேமதாசவின் மகனை இந்தியா விரும்புகிறதென்றால் அதன் பின்னணியில் ஏதோவொரு பலமான காரணம் இருக்கத்தான் வேண்டும். மகிந்த தரப்பில் வேட்பாளராக நிறுத்தப்படுபவரை வெற்றிகொள்ளக்கூடிய ஆற்றல் சஜித்திடம் உள்ளதாக இந்தியா கருதியிருக்கக்கூடும். அதுமட்டுமல்லாது சிறுபான்மையின மக்களின் வாக்குகளைக் கவரக்கூடிய சக்தி அவரிடம் உள்ளதாகவும் இந்தியா நினைத்திருக்கக்கூடும். ஆனால் இலங்கையின் அடுத்த அரச தலைவராகப் பதவியேற்பவர் தொடர்பாக இந்தியா அதிக அக்கறை காட்டி வருகின்றமை தெளிவாகவே தெரிகின்றது.

இந்த நிலையில் அரச தலைவர் வேட்பாளராக் கோத்தபாய களமிறங்கினால் அவர் படுதோல்வி அடைவாரெனவும் ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாழ்வு அஸ்தமனமாகிவிடுமெனவும் தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க உறுதியாகக் கூறியுள்ளார். இதேவேளை சிறுபான்மையினரின் வாக்குகள் தமக்குத் தேவையில்லையெனவும் அவர்களின் ஆதரவின்றித் தம்மால் தேர்தலில் வெற்றியீட்ட முடியுமெனவும் கோத்தபாய ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

அவர் பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்தபோது தமிழர்கள் மட்டுமல்லாது முஸ்லிம் மக்களும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். கடந்த அரச தலைவர் தேர்தலின்போதுகூட இந்த மக்கள் மகிந்தவுக்கு எதிராகவே வாக்களித்து அவரைத் தோல்வியடையச் செய்தனர். இதேநிலை கோத்தபாயவுக்கும் ஏற்படுமெனக் கூறமுடியும்.

சீனா கடன்பொறிக்குள் இலங்கையைச் சிக்க வைத்து அந்த நாட்டை அடிமைப்படுத்தி வருவதாக அமெரிக்கா அண்மையில் தெரிவித்தமை கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும். இலங்கையில் சீனாவின் தலையீடு இருப்பதை இந்தியா மட்டுமல்லாது அமெரிக்காவும் விரும்புவதில்லை. ஆசிய நாடுகளில் பல சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கி அதிலிருந்த மீளமுடியாத நிலையில் தவித்து வருகின்றன. இலங்கையும் அவ்வாறனதொரு நிலையில்தான் உள்ளது. கோத்தபாய அந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுவிட்டால் சீனாவின் ஆதிக்கத்தை எவராலும் களைந்துவிட முடியாது. அதுமட்டுமல்லாது மகிந்த தரப்பினர் அதிகாரத்தில் இருப்பதையே சீனா விரும்புகின்றது. அரசியல் குழப்பம் ஏற்பட்டு மகிந்த தலைமை அமைச்சர் பதவியில் அமர்ந்தபோது அவருக்கு உனடியாகவே வாழ்த்துத் தெரிவித்த நாடு சீனா என்பதை நாம் மறந்துவிட முடியாது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது இலங்கையின் அரச தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல்களம் இந்தியாவுக்கும் -சீனாவுக்குமிடையே ஒரு போட்டிக் களமாகவே மாறவுள்ளது. இதில் வெற்றிபெறுகின்ற நாடு இலங்கை மீது தனது பிடியை இறுக்குகின்ற வாய்ப்பையும் பெற்றுவிடும்.

இந்தியா நாடாளுமன்றத் தேர்தல்கள் மிக விரைவில் இடம்பெறவுள்ள நிலையிலும் பாகிஸ்தானுடன் முறுகல் நிலையொன்று உள்ள நிலையிலும் இலங்கையின் அரச தலைவர் தேர்தல் முடிவுகள் இந்தியாவுக்கு முக்கியமானதாகவே அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்காக களமிறங்கியது இந்தியா

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாக கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் இலங்கைக்குச் சாதகமான விதத்தில் இந்தியா தலையிட்டது என்று இந்தியாவின் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் ரணில் விக்கிரமசிங்க அரசுக்குச் சுவாசிப்பதற்கான சூழலை வழங்குவதற்கான இந்தியாவின் விருப்பத்துக்கு பன்னாட்டுச் சமூகம் ஆதரவாக செவிசாய்த்துள்ளது என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

ரணில் அரசுக்கு நிலைமாற்றுக்கால நீதி தொடர்பான முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு மேலும் இரண்டுவருடகால அவகாசம் வழங்கப்படவுள்ளது என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் இலங்கை தொடர்பான தீர்மானத்தை தயாரித்த போது அது குறித்து இந்தியாவுக்கு தொடர்ச்சியாக தகவல்களை வழங்கிவந்தது என்று இந்த விடயம் குறித்து நன்கு அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன எனவும் இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட குழப்பமான அரசியல் சூழ்நிலை குறித்தும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்கவுக்கும் இடையிலான உறவுகளில் காணப்படும் பதட்டம் குறித்தும் அனைத்து நாடுகளுக்கும் தெரியும் என்று குறிப்பிட்ட வட்டாரங்கள் தெரிவித்தன எனவும் இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசின் மீது இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான தருணம் இதுவல்ல என்ற கருத்து நிலவியதாக இந்திய அதிகாரியொருவர் தெரிவித்தார் எனவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

சில நாடுகள் இறுக்கமான நிபந்தனைகளை கொண்ட தீர்மானத்தை கொண்டுவர முயற்சித்தன இந்தத் தருணத்திலேயே இந்தியா தலையிட்டு இலங்கையின் அரசியல் சூழ்நிலை குறித்து நினைவுபடுத்தியது எனவும் இந்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பெருமளவு தலையீடுகளுக்கான அவசியம் இருக்கவில்லை என்று தெரிவித்துள்ள அதிகாரிகள் இலங்கை அரசுக்கு சுவாசிப்பதற்கான சூழலை வழங்கவேண்டும் என்பது குறித்து பன்னாட்டுச் சமூகத்தின் மத்தியில் கருத்து காணப்பட்டது எனவும் தெரிவித்துள்ளன.

நாங்;கள் அதிகமாக எதனையும் செய்யவேண்டிய தேவையிருக்கவில்லை என்று அதிகாரியொருவர் தெரிவித்தார் என இந்திய ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கைத் தீர்மானத்துக்கு இணை அனுசரனை வழங்கவில்லை என்றால் வாக்கெடுப்பு அவசியமாகலாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தியாவும் பன்னாட்டுச் சமூகமும் மறைமுக செய்தியொன்றை தெரிவித்தன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

வாக்கெடுப்பு இடம்பெற்றால் என்ன நடைபெறும் என்று தெரிவிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ள முக்கிய வட்டாரங்கள் வாக்கெடுப்பின்றி தீர்மாணம் நிறைவேறும் என்று குறிப்பிட்டன எனவும் இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

(ஒ.5)

## மாரப்பனவின் உரையை நானே மாற்றியமைத்தேன்

### மைத்திரி இறுமாப்பு



கொழும்பு, மார்ச் 21

அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவின் ஜெனிவா உரையில் நானே தலையிட்டுத் திருத்தங்களை மேற்கொண்டேன். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் மேற்படி தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் தினேஸ் குணவர்தன, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது ஜெனிவா விவகாரம் குறித்து விசனம் வெளியிட்டுள்ள அரச தலைவர், அனைத்தும் தனது கையை மீறி நடந்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

'அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் அமைச்சின் செயலருக்கும் என்ன நடக்கிறது என்பதே தெரியாது.

உத்தரவுகள் எல்லாம் தலைமை அமைச்சர் அலுவலகத்தில் இருந்து தான் செல்கின்றன. அமைச்சர் திலக் மாரப்பனவை அழைத்து அவர் வாசிக்கவுள்ள அறிக்கையைக் கேட்டேன். அதில் உள்ள பல விடயங்களை ஏற்க முடியாது. அதனால் திருத்தினேன். நான் திருத்திய அறிக்கையையே அவர் வாசிக்கவுள்ளார். (ஜெனிவாவில் நேற்று ஆற்றிய உரை) அவருக்கும் தெரியாமல் சில விடயங்கள் நடக்கின்றன. ஆனால் நான் யார் என்பதை தலைமை அமைச்சருக்கு விரைவில் காட்டுவேன், என்று அரச தலைவர் மைத்திரிபால இதன்போது கூறியுள்ளார்.

(ஒ.5)

## தீர்மானத்தை திருத்தினால் இலங்கைக்கு வாய்ப்பாகும்

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.



கொழும்பு, மார்ச் 21

ஜெனிவாவில் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளால் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை திருத்துவதற்கு முற்பட்டால் அது இலங்கைக்குச் சாதகமாக போய்விடும். அதனைப் பயன்படுத்தி இலங்கையும் திருத்தங்களை செய்துவிடும். இதனால்தான் நாங்கள் கேட்கும் திருத்தங்களை அவர்கள் கொண்டு வராமல் இருக்கிறனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜெனிவாவில் உறுப்பு நாடுகளை சுமந்திரன் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தத் தீர்மானத்திலும் காலக்கெடு இலங்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வளவு காலத்துக்குள் இங்கே இந்த தீர்மானத்திலே இலங்கை தான் பொறுப்பெடுத்த விடயங்களை நிறைவேற்றுகின்ற போது அதனை மேற்பார்வை செய்வதற்கும் தொழில்நுட்ப உதவிகளை செய்வதற்கும் உந்தித் தள்ளுவதற்கான பொறிமுறை தான் இந்தத் தீர்மானம். ஆகவே தான் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இப்போது முன்வைத்திருக்கின்ற தீர்மான வரைபே எம்மைப் பொறுத்த வரையில் போதாது. இது இன்னமும் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அதனை திருத்துவ தற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தால் அது இலங்கைக்கு சாதகமாகப் போய்விடும். அதனைப் பயன்படுத்தி இலங்கையும் திருத்தங்களை செய்துவிடும். அதனால் தான் நாங்கள் கேட்கும் திருத்தங்களை அவர்கள் கொண்டு வராமல் இருக்கின்றார்கள்.

பத்து வருடங்களாக நாம் சொல்லிவருகின்ற ஒரு கூற்று உண்மை கண்டறியப்பட வேண்டும் என்பதாகும். அந்த உண்மையின் அடிப்படையிலேயே நீதி செய்யப்பட வேண்டும் - என்றார்.

(ஒ.5)

## ஆறு தமிழ்க் கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்ட மனு கையளிப்பு

கொழும்பு, மார்ச் 21

இலங்கை விவகாரத்தை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட மூன்று விடயங்களை உள்ளடக்கி, ஆறு தமிழ் கட்சிகளின் தலைவர்களால், கைச்சாத்திடப்பட்ட மனு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விவகாரத்தை, பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல வேண்டும், பன்னாட்டு தீர்ப்பாயம் ஒன்று நியமிக்கப்பட வேண்டும், 30/1 மற்றும் 34/1 ஆகிய தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஐ.நா. ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படுவதுடன் அவர் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்க வேண்டும் என்று அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

(ஒ.5)

see more news in newuthayan.com

## மைத்திரி இணங்காமல் இணைஅனுசரணை வழங்க முடியாதாம்

கொழும்பு, மார்ச் 21

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியின்றி அவரது ஒத்துழைப்பின்றி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்படும் தீர்மானத்துக்கு அரசு இணைஅனுசரணை வழங்க முடியாது. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை தொடர்பாக பிரிட்டன் கொண்டுவர இருக்கும் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எந்த அனுமதியும் வழங்கவில்லை. அரச தலைவரின் அனுமதியின்றி இணை அனுசரணை வழங்க முடியாது. ஜெனிவாவில் உள்ள இலங்கை அதிகாரிகளுக்கு அயலுறவுத்துறை அமைச்சு அன்றி வேறு நபர்களே உத்தரவுகளை வழங்குகின்றனர்.

அரசமைப்புக்கு அமைவாக, அரச தலைவரின் அனுமதியின்றி இணைஅனுசரணை வழங்க முடியாது. தற்பொழுது அயலுறவுத்துறை அமைச்சு தொடர்பான முடிவுகள் நீதி அமைச்சிலிருந்தே எடுக்கப்படுகிறன. அமைச்சருக்கோ செயலருக்கோ அவை குறித்து எதுவும் தெரியாது -என்றார்.

(ஒ.5)

## விருந்து வைத்து பன்நாடுகளை மடக்க முயற்சிக்கும் இலங்கை!

கொழும்பு, மார்ச் 21

இலங்கை தொடர்பாக பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நாளை முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை திருத்துவதற்கான முயற்சிகளில், இலங்கை அரச தரப்பு பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன.

ஜெனிவா சென்றுள்ள அரச தரப்பு பிரதிநிதி களான அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் மற்றும் அயலுறவுத்துறை அமைச்சின் செயலர் ரவிநாத் ஆரியசிங்க ஆகியோர், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தனர். உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் விருந்துபசாரம் ஒன்றுக்கு அழைக்கப்பட்டு, அவர்களுக்கு நிலைமைகள் தெளிவுபடுத்தப்பட்டன. இதன்போதே தீர்மானத்தில் திருத்தங்களைச் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாகக்கூறப்படுகிறது.

(ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக வரி அறவிடப்படுகிறது என மீன் வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
அளவெட்டி, கும்பளை மீன் சந்தையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் அறவிடப்படும் வரி கட்டணம் அதிகமாக உள்ளது என்று தெரிவித்து மீன் வியாபாரிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.
புதிய வரி அறவீடுகள் தொடர்பாக சந்தை வளாகத்தில் பிரதேச சபையால் நேற்று அறிவித்தல் ஒட்டப்பட்டதை அடுத்து வியாபாரிகள் சந்தைக்கு வெளியே வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
"வலி வடக்கு பிரதேச சபையே மக்களை வதைக்காதே", ஊழல் அரசியல் பெருச்சாளிகளே வரிச் சுமையை மக்கள் மீது திணிக்காதே" போன்ற வாசகங்களை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
போராட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் தெரிவித்ததாவது:
2018 ஆம் ஆண்டு சந்தை குத்தகைக்கு விடப்பட்டது. தெல்லிப்பழை பிரதேசத்தைச் சேர்ந்தவர் குத்தகைக்கு எடுத்தார். அப்போது கிலோவுக்கு நான்கு ரூபாவும், இட வாடகை 50 ரூபாவும் அறவிடப்பட்டது. பின்னர் அந்தச் சந்தை தனியார் காணியில் இருந்து அரச காணிக்குச் சென்றது. அங்கும் நாங்கள் வியாபாரத்தை தொடர்ந்து முன்னெடுத்தோம். அந்த இடத்திலும் அதே மாதிரியான வரி தான் அறவிடப்பட்டது. 2019ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டது. அப்போது 10 ரூபாவும் 100 ரூபா இட வாடகையும் தர வேண்டும் என்று கோரப்பட்டது. அதில் இருந்து வரிப் பிரச்சினை ஆரம்பமானது. பின்னர் நாம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தவிசாளருடன் சந்தித்து



கலந்துரையாடினோம். கிலோவுக்கு 4 ரூபாவும் இட வாடகை 50 ரூபாவும் கொடுத்து வியாபாரம் செய்யுங்கள் என்று அவர் கூறினார். அதன் பின்னர் பெப்ரவரி மாதம் மட்டும் அவ்வாறு வரி செலுத்தி வியாபாரம் செய்தோம். இப்போது இந்த அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது.
8 ரூபா வரியும் இட வாடகை 100 ரூபாவும் தர வேண்டும் என்று குத்தகைக்காரரால் கூறப்படுகின்றது. நாம் அந்தச் சந்தையில் இருந்து வெளியேறி அருகில் உள்ள இடத்தில் வியாபாரம் செய்து வருகிறோம். 50 மீற்றர் தூரத்தில் சந்தை இருக்கும் போது இவ்வாறு வெளியில் வியாபாரம் நடக்கிறது என்று தெரிவித்து நீதிமன்றில் பிரதேச சபை வழக்குத் தாக்கல் செய்துள்ளது. வரி அதிகம் என்பதாலேயே நாம் வேறு இடத்தில் மீன் விற்கின்றோம். எமது நிலையை அறிந்து வரியை முன்னர் போன்று அறவிட வேண்டும். என்றனர்.
இது தொடர்பில் வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தவிசாளரிடம் கேட்ட போது:
விலை மதிப்பீடு பொதுவானது. அதற்கு அமைவாக தான் இந்த வரி அறவீடு வழங்கப்பட்டுள்ளது. இதனை அவர்கள் உணர வேண்டும். அவர்களின் நிலை அறிந்து அவர்களுக்காகவே அந்தச் சந்தை அமைக்கப்பட்டது - என்றார்.
(எ-7,26)

# குடும்பப் பெண் காயத்துடன் கிணற்றில் சடலமாக மீட்பு

- ★ கழுத்தில் கத்திவெட்டுக் காயம்
- ★ தண்ணீரில் மூழ்கியதால் சாவு
- ★ காரணம் தெரியவரவில்லை

வவுனியா, மார்ச் 21
குடும்பப் பெண் கழுத்தில் சிறு காயத்துடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் கூறப்பட்டுள்ள போதும், அதற்கான காரணங்கள் மர்மமாகவே உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
வவுனியா நெளுக்குளம் பகுதியில் நேற்றுச் சடலம் மீட்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த வ. கௌரி (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார். அவருக்கு 11 மற்றும் 5 வயதுகளில் பிள்ளைகள் உள்ளனர்.
அந்தக் குடும்பத்தினர் வெளிநாடு ஒன்றில் வசித்து வந்தனர். ஒரு வருடத்துக்கு முன்னர் அவர்கள் வவுனியா நெளுக்குளத்துக்கு வந்து குடியிருந்தனர். கணவன் கடந்த வாரம் வெளிநாடு சென்றுள்ளார். இந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
அவரும் அவரது பிள்ளைகளும் உதவிக்கு என்று மற்றொரு பெண்ணும் அந்த வீட்டில் தங்கியுள்ளனர். நேற்றுமுன்தினமிரவு கணவன் அயல்வீட்டாருக்குக் அழைப்பு எடுத்து, தனது வீட்டுக்கு அழைப்பு எடுத்தபோதும் பதிலில்லை. என்னவென்று பார்த்துக் கூறுங்கள் என்று கூறியுள்ளார். அதன்படி அயல்வீட்டார் அந்த வீட்டுக்குச் சென்று பார்த்த போது கதவு திறந்திருந்தது. குருதி அடையாளங்கள் சில இடங்களில் காணப்பட்டன. அங்கிருந்த மூவரும் உறக்கத்தில் காணப்பட்டனர். அவர்களுக்கு இது பற்றி எதுவும் தெரியவில்லை என்று ஆரம்ப விசாரணையில் தெரிய வந்தது என்று பொலிஸார் கூறியுள்ளனர்.
அவரைத் தேடிச் சென்று கிணற்றில் பார்த்தபோது அதற்குள் அவர் அசைவின்றிக் கிடக்கக் காணப்படுகிறார் என்பது நேற்று முன்தினமிரவு சுமார் 11.30 அளவில் தெரியவந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. நேற்று அதிகாலை வவுனியா மற்றும் நெளுக்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.
சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.
வவுனியா நீதிவான் திருமதி தஸ்னீம் பௌசான் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். நேற்றுக் காலை சடலம் கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டது.



வவுனியா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்போதே, கழுத்துப் பகுதியில் சிறு காயம் ஏற்பட்டபோதும், அதனால் இறப்பு நிகழவில்லை. அவர் நீரில் மூழ்கியதால் இறப்பு நிகழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
கழுத்தை அறுப்பதற்கு பயன்படுத்தியதாகக் கருதப்படும் கத்தி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. அந்த நிலைக்குக் காரணம் என்ன என்பது பற்றி விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(த-110,222)

# ஜெனிவாப் பிரச்சினைகளை தீர்க்கும் வழியை பாருங்கள்

## அரசுக்கு அர்ஜூன அறிவுரை

*கொழும்பு, மார்ச் 21*
*ஜெனீவாத் தீர்மானத்தால் எமது நாட்டின் படைவீரர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அதனைச் சீர்செய்யவே முதலில் பார்க்கவேண்டும்.*

இவ்வாறு அமைச்சர் அர்ஜூண ரணதுங்க தெரிவித்தார்.
கம்பஹாவில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஜெனீவாவிவகாரத்தைமுன்னிலைப்படுத்தித் தற்போது இனவாதக் கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். ஆனால் பன்னாடுகளுடன், ஐ.நாவுடன் மோதுவதால் எந்தவிதமான நன்மைகளும் நாட்டுக்கு ஏற்படப் போவதில்லை.
குறிப்பாக புத்திஜீவிகளை ஜெனீவாவுக்கு அனுப்பி சிக்கலுக்குரிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவற்றைச் சீர்செய்ய வேண்டும். தற்போது அவ்வாறானதொரு செயற்பாட்டைத் தான் நாட்டின் தலைவர் முன்னெடுக்கின்றார். இதற்கு எதிராகக் கோசங்களை எழுப்பி அனைத்தையும் சீர்குலைக்க முடியாது. உள்ளக அரசியல் நலன்களுக்காக இந்த விடயங்களைத் தவறான வழியில் பயன்படுத்துவது பொருத்தமான விடயமல்ல - என்றார்.
(த-61)

# கால அவகாசம் என்பது தமிழர்களது குரல்களை நீர்த்துப்போகச்செய்யவே

## தமிழக சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்ற துளியளவு எண்ணம் கூட இலங்கை அரசுக்கு இல்லை. இவர்கள் மக்களுடைய எண்ணங்கள், கோரிக்கைகள், குரல்கள் என்பவற்றை நீர்த்துப் போகச்செய்யவேண்டும் என்பதற்காகவே காலம் கடத்துகின்றனர். இது தான் இலங்கையுடைய திட்டம் என்று தமிழக சட்டமன்ற உறுப்பினர் கருணாஸ் தெரிவித்தார்.
ஐ.நா. மனிதஉரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட அவர் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
சிறிசேனவுடைய அரசு வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று கூறியுள்ளது. இலங்கை அரசு கேட்டுக் கொண்ட இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் கடந்த 2017ஆம் ஆண்டுடன் நிறைவடைந்துள்ளது. மீள இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்க [illegible] யாக கலப்பு நீதி[illegible] இலங்கை அரசு நிறுத்தப்பட்டு இலங்கையில் நடந்தது ஒரு இனப் படுகொலை என்பதை உலக அரங்கில் எடுத்துக் கூறி நீதிவழங்க வேண்டும் என்பதுதான் ஒட்டுமொத்த தமிழர்களுடைய கோரிக்கை.
இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்கள் தங்களுடைய சந்ததிகளுக்காக, அவர்களுடைய எதிர்கால வாழ்க்கைக்காக, அவர்களுடைய உரிமைகளை மனதிலே கொண்டு ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, தங்களுக்குள் இருக்கும் காழ்ப் [illegible] பாடுகளை [illegible] வேண்டும் - என்றார்.
(எ-21)

# ஐ.நா. தீர்மானத்தை எதிர்க்குமாறு உறுப்பு நாடுகளிடம் கோருங்கள்

## அரசதலைவருக்கு மகிந்த அணி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 21
இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குவதிலிருந்து இலங்கை முற்றாக விலகி, இந்தத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களிக்குமாறு இறைமையுள்ள அரசு என்ற வகையில் ஏனைய உறுப்பு நாடுகளிடத்தில் கோரிக்கை விடுக்க வேண்டும்.
இவ்வாறு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் பத்தரமுல்லையில் நேற்று நடைபெற்ற பொதுமக்கள் முன்னணியின் ஊடகவியலாளர்சந்திப்பில்தெரிவித்தார்.
மேலும்அவர்தெரிவித்ததாவது;
ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து நிறைவேற்றப்படும் தீர்மானம் தொடர்பில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை நாம் நேரடியாகச் சந்தித்திருந்தோம். அதன்போது இலங்கைஅரசுஇணைஅனுசரணை வழங்குவதை முதலில் கைவிடுமாறும், தீர்மானத்தை எதிர்ப்பதுடன் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பகிரங்கமாகக் கூறுமாறும்அவரிடத்தில்கேட்டுக்கொண்டுள்ளோம். அரசதலைவருக்கு ஏற்கனவே இந்தவிடயம் சம்பந்தமாகக் கடிதம்மூலமாக அறிவித்திருந்த நிலையில் அவரை நேரடியாகச் சந்தித்து இந்த விடயங்களைத் தெரியப்படுத்தியுள்ளோம். தற்போதுகூட இதற்கான காலம் இருக்கின்றது. இன்னமும் இலங்கை குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. அதனை உடனடியாக நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்- என்றார்.
இங்கு கருத்து வெளியிட்ட அநுர பிரியதர்சன யாப்பா, இலங்கையில் 40ஆயிரம் வரையிலான பொதுமக்கள் காணாமலாக்கப்பட்டனர் என்று தகவல்கள் அடங்கிய அறிக்கையொன்றை யஸ்மின் சூக்கா தலைமையிலான அமைப்பினர் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ளனர். இந்த விடயத்தில் பிரிட்டன் முக்கியஸ்தரான ஹேராட் நேஸ்பி சரியான பதிலொன்றை வழங்கியிருந்தார். அவருடைய பதிலையும் ஆவணங்களையும் முன்னிலைப்படுத்தி ஜெனீவா வளாகத்தில் அது சம்பந்தமான உரிய தெளிவுபடுத்தல்களைச் செய்திருக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்க வேண்டும். ஆனால் துரதிஸ்டவசமாக அரசு அத்தகைய நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. இது இந்த அரசு செய்த மிகப்பெரும் துரோகம் - என்றார்.
(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்காக எப்படியான சவால்களையும் ஏற்பேன்

## கரு ஜயசூரியா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும், சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவதற்காகவும் எந்தவொரு சவாலையும் ஏற்கத் தயாராகவே இருக்கின்றேன். இவ்வாறு சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

மல்வத்த பீடத்தின் மகாநாயக்க தேரர் மற்றும் ஏனைய சங்க சபைகளின் மகாநாயக்க தேரர்களால், சபாநாயகர் கருஜயசூரியவுக்கு 'விஷ்வகீர்த்தி சிறிலங்கா ஜனரஞ்சன' விருது நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1994ஆம் ஆண்டு நான் அரசியலுக்குப் பிரவேசித்தேன். அன்று முதல் இன்று வரை மோதல்கள் இன்றி, தூய அரசியலையே முன்னெடுத்துவருகின்றேன். இதுவே எனது கொள்கையாகும். அரசியல் பரப்புரைக்காக 'கட்டவுட்', 'போஸ்டர்', 'பனர்', 'பொலிதீன்' போன்றவற்றை பயன்படுத்தாது, எதிர்கால அரசியல் பிரமுகர்களுக்கு சிறப்பான முன்னுதாரணத்தை வழங்கியுள்ளேன். கறைபடியாத கரத்துடன் அரசியலுக்குப் பிரவேசித்த நான், வெளியேறும் போதும் மதிப்புடனேயே வெளியேறவே முற்படுகின்றேன்.

நாட்டு மக்களுக்கு நீதி, நேர்மை, சட்டம், ஒழுங்கு இவற்றை நிலை நிறுத்த எத்தகைய சவால்கள் வந்தாலும் ஏற்றுக்கொள்வேன். அதனூடாக ஜனநாயகத்தைப் பாதுகாப்பேன்.

நான் பிறப்பு ரீதியாக சிங்கள பௌத்தனாக இருந்தாலும் நான் இனவாதியோ, மதவாதியோ அல்லன். எனது இனம், எனது மதம், எனது பிறப்புடன் கிடைத்த ஒன்றே தவிர நான் கேட்டுப் பெற்றதல்ல. புத்தபிரானின் போதனைகளின் படி ஏனைய மதங்களுக்கும் இனங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

1956 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமூகப் புரட்சிக்கு அந்தக் கால ஆணைக்குழு அறிக்கைகள் காரணமாக இருந்தன. அவை எனது வாழ்விலும் தாக்கத்தைச் செலுத்தின.

அதன் பிறகு இராணுவ அதிகாரியாகவும் தொடர்ந்து தனியார் துறையில் 32 வருடமும் சேவை புரிந்தேன்.

வெளிநாட்டுத் தூதுவராகவும், நகர பிதா, மாகாண சபை எதிரணித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், அத்துடன் தற்போதைய சபாநாயகர் ஆகிய பதவிகளை வகித்த நான், எனது கடமைகளையும் பொறுப்புக்களையும் சரியாக நிறைவேற்றி வந்துள்ளேன் - என்றார். (ஒ.5)

# முச்சக்கரவண்டி தீயில் எரிந்து நாசம்

கொழும்பு,மார்ச் 21

வீதியால் பயணித்த முச்சக்கர வண்டியில் தீடீர் என்று தீப்பிடித்ததால் முழுமையாக சேதமடைந்துள்ளது.

நாவலபிட்டியில் தலவாக்கலை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக நாவலபிட்டி பொலிஸார் தெரிவித்தனர். மின்சார கோளாறு காரணமாகவே இந்தத் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாக நாவலபிட்டி பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரனைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஐ)





## போலிப் பத்திரங்கள் அச்சிட்டவர் கைது

கொழும்பு, மார்ச் 21

போலிச் சாரதி அனுமதிப் பத்திரங்களை தயாரித்து வந்த ஒருவர் இராஜகிரிய பகுதியில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராஜகிரிய மொரவிடியாவ பாதைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையால் இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்து 52 போலிச் சாரதி அனுமதிப் பத்திரங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய கிஹனகே பிரித்தி சாந்த எனப்படுபவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ.5)

## மின்விநியோகம் தடைப்படாது

### மின்சக்தி அமைச்சு

கொழும்பு, மார்ச் 21

நாடு முழுவதும் கடந்த இரண்டு தினங்களாக சுழற்சி முறையில் மின்விநியோகம் இடம்பெற்று வந்தது. நுரை ச்சோலையில் அமைந்துள்ள மின்பிறப்பாக்கி சீர் செய்யப்பட்டுள்ளதால், மின்விநியோகம் தடையின்றி வழங்கப்படும் என்று மின்சக்தி அமைச்சு நேற்றுக் காலை அறிவித்தது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் உள்ள இரண்டாவது மின்பிறப்பாக்கியில் தொழில்நுட்பக் கோளாறு கடந்த திங்கட் கிழமை ஏற்பட்டது. நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின் விநியோகம் இடம்பெற்றது. மின்பிறப்பாக்கி இயந்திரம் நேற்றுக் காலை சீர் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து நாடு முழுவதும் மின்விநியோகம் தடையின்றி தொடரும் என்று மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ.5)

## ஐ.தே.க. உறுப்பினர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

கொழும்பு, மார்ச் 21

பெலியத்த பல்லத்தர மோதரவான பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினரொருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுப் புதன் கிழமை காலை வேளையில் நடைபெற்றுள்ளது.

பெலியத்த பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் கபில அமரகோன் காயமடைந்துள்ளார். அவர் தங்காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர, சம்பவம் தொடர்பானமேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# சம்பந்தனின் தோல்வி வெளிப்பட்டுவிட்டது

## கூறுபவர் டக்ளஸ் எம்.பி.

யாழ்ப்பாணம், மார்ச் 21

பன்னாடுகளை நம்புவதை விட தமிழ் மக்களுக்கு வேறு வழி இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் தெரிவித்திருப்பது அவரது அரசியல் தோல்வியையும், இயலாத்தனத்தையுமே வெளிக்காட்டுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பன்னாடுகளைத்தான் தமிழ் மக்கள் நம்பவேண்டும் என்றால், அதில் இடைத்தரகர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இருக்கவேண்டும்? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

அரசுக்கு முண்டு கொடுத்து தமது சுயலாபங்களைப் பெற்றுக்கொள்ளும் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் பன்னாடுகளைத்தான் நம்ப வேண்டும் என்று கூறுவது தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்றும் அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (த)

# மங்களவின் எதிர்ப்பால் சீற்றமடைந்த மைத்திரி

கொழும்பு, மார்ச் 21

வான்படைக்கு வானூர்தியைக் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு, நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்ப்பு வெளியிட்டதால், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடும் சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வான்படைக்கு வானூர்தியைக் கொள்வனவு செய்வதற்கு, பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் அரச தலைவரால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

அப்போது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த நான்கு ஆண்டுகளில் வான்படை மற்றும் கடற்படைக்கான வானூர்திகள் மற்றும் கப்பல்களைக் கொள்வனவு செய்ய முயன்ற போதெல்லாம் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், அவற்றைக் கொள்வனவு செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார்.

அத்துடன் வானூர்திகள், கப்பல்களின் வெற்றிடத்தை மீள் நிரப்புவதற்கான, பரிந்துரைகளைச் செய்வதற்குக் குழுவொன்றை அமைக்குமாறும், அரச தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர, வான் படைக்கு வாங்கவுள்ள வானூர்தி 40 ஆண்டுகள் பழைமையானது என்பதால் தான் நிதி அமைச்சு எதிர்ப்புத் தெரிவிப்பதாக கூறியுள்ளார். (ஒ.5)

# அயல்நாட்டுடன் மகிந்த அந்நியோன்யமாகிறார்

கொழும்பு, மார்ச் 21

இந்தியாவின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனனுடன் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சசந்தித்து கலந்துரையாடியுள்ளார்.


இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள சிவசங்கர் மேனன், அவரது பயணத்தின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மகிந்த ராஜபக்சவை அவரது இல்லத்துக்குச் சென்று சந்தித்திருந்தார்.

இரு நாட்டில் நடக்கும் அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும் அவற்றை எதிர்கொண்டு எதிர்காலத்தில் முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உட்பட முக்கிய பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் தனது தோல்விக்கு இந்தியாவே காரணம் என்று மகிந்த குற்றம் சுமத்தியிருந்தார். ஆனால் அண்மைக்காலமாக இந்தியாவுடன் அவர் நெருக்கமான தொடர்புகளைப்பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)







திருகோணமலை அருள் மிகு சிறி பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று வெகுவிமர்சையாக இடம்பெற்றது. அம்பாள், விநாயகர், முருகப்பெருமான் ஆகிய தெய்வங்களின் தேரை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்ததுடன் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர். (ஐ-40)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாய உற்பத்திகளை இலக்கு வைக்கும் திருடர்

## நெருக்கடியில் யாழ்ப்பாண விவசாயிகள்

*சாவகச்சேரி, மார்ச் 21*

**யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக விவசாய உற்பத்திகள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள் ளன. பயிர்கள் வளர்ந்து அறுவடைக்குத் தயராகும் நிலையில் அவை திருடப்படுவது விவசாயிகளைப் பெரும் விரக்தியில் தள்ளியுள்ளது.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. உருளைக்கிழங்கு, கத்தரிக்காய், கறிமிளகாய், வெங்காயம் எனப் பல விவசாய உற்பத்திகள் களவாடப்பட்டுள்ளன.

இதைவிட மட்டுவிலில் தோட்டங்களில் நடுகை செய்வதற்கு நாற்றுமேடையில் இருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட கத்தரி நாற்றுக்கள் கடந்தவாரம் களவாடப்பட்டுள்ளன. மட்டுவிலில் பல இடங்களில் இவ்வாறு நாற்றுக்கள் திருடப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

அதைப் போன்று கடந்த பெப்ரவரி மாதம் குப்பிளான் தெற்கு, ஏழாலை கிழக்கு ஆகிய இடங்களில் விவசாய நிலங்களுக்குள் புகுந்த திருடர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான உருளைக் கிழங்கு, கறிமிளகாய், வெங்காயம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். அந்தப் பகுதியில் சுமார் 400 கிலோ கறிமிளகாய்கள் திருடப்பட்டுள்ளன. நூற்றுக் கணக்கான கறிமிளகாய்ச் செடிகள் முறித்து நாசம் செய்யப்பட்டுள்ளன என்று விவசாயிகள் கூறுகின்றனர். இரவு பகலாக கடுமையாக உழைத்து அதன் பலனைப் பெறும் சமயத்தில் அவை திருடப்படுவது பெரும் வேதனை தருகின்றது என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இதனால் தொடர்ந்து விவசாயம் செய்ய முடியாத நிலமை காணப்படுகின்றது என்றும் அவர்கள் வேதனை தெரிவித்தனர். விவசாய உற்பத்திகள் திருடப்படுவது தொடர்பாகப் பொலிஸாரிடம் முறையிடச் சென்றால் அவர்கள் முறைப்பாட்டை ஏற்கிறார்கள் இல்லை என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்தத் திருட்டுக்களைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய உற்பத்திகளும், நாற்றுக்களும் திருடப்படுவதால் தொடர்ந்து விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பது தடைப்படுகின்றது. நாம் கடன்களைப் பெற்றும், நகைகளை அடகு வைத்தும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். விவசாய உற்பத்திகள் திருடப்படுவதால் நாம் பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (எ-131)

# சாரதிக்கு தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 21

விபத்தில் காயமடைந்த நபருக்கு 35 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 3 ஆயிரம் ரூபா தண்டமும், சாவகச்சேரி நீதிமன்றில் விதிக்கப்பட்டது.

நாவற்குளிப் பகுதியில் வீதியில் சென்றவரை கடந்த வருடம் ஆகஸ்ட் 23 ஆம் திகதி விபத்தின் மூலம் காயமடையச் செய்த வழக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் விசாரணையின்போது இரு பகுதியினரும் சமாதானமாகச் செல்வதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து காயமடைந்தவருக்கு 35 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறும், விபத்தைத் தடுக்க முயலாமை, கவனமின்றி வாகனத்தைச் செலுத்தியமை, விபத்தை ஏற்படுத்தி காயம் விளை வித்தமை ஆகிய குற்றங்களுக்காக வாகனச் சாரதிக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# அன்னதான நிகழ்வு

கொடிகாமம் மார்ச் 21

பன்னாட்டு பௌத்த வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் பனி முகில் நேர தான மற்றும் அன்னதான நிகழ்வுகள் கடந்த 16 ஆம் திகதி

சனிக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றன.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கோனார தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாவற்குழி பௌத்த விகாராதிபதி கலந்து கொண்டு தான நிகழ்வுகளில் ஈடுபட்டார்.

நிகழ்வில் தென்மராட்சிப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.பி.தஸநாயக்கவும் கலந்து கொண்டார். (க-159)

# சங்கானையில் திடீரென அதிகரிக்கின்றது டெங்கு

## சுகாதாரப் பிரிவினர் சிறப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம் மார்ச், 21

சங்கானைப் பகுதியில் கடந்த ஒரு வார காலத்தில் 15 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு திடீரென இலக்கான நிலையில் சுகாதாரப் பிரிவினர் சிறப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியில் கடந்த வாரம் டெங்கு நோய்க்கு இலக்காவோர் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது. அவ்வாறு இலக்கானவர்களின் வீடுகள் உள்ளிட்ட பிரதேசங்களுக்கு நுளம்புக் கட்டுப்பாட்டுப் புகை விசிறப்பட்டதோடு ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு இலக்கானவர்கள் அனைவருமே சங்கானைச் சந்தையில் வியாபார நடவடிக்கை , சந்தை மேற்பார்வையாளர்கள் , வரி அறவீட்டாளர்கள் பணியில் இருப்பது கண்டறியப்பட்டது. இதனடிப்படையில் சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள்,மற்றும் பிரதேச சபைத் தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் சந்தைப் பகுதியில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர் . இதன்போது சந்தையில் தண்ணீர் ஓடும் பகுதியின் சில இடங்களில் டெங்கு குடம்பி கண்டுபிடிக்கப்பட்டதனால் உடனடியாக குளோரின் இடப்பட்டு சுத்திகரிக்கப்பட்டதோடு அதற்கான தடுப்பு மருந்தும் மாலையில் விசிறப்பட்டது. (க-105)



# வேலு ஐயாவின் நினைவுதினம்

கொடிகாமம், மார்ச் 21

இலங்கை தமிழரசுக்கட்சியின் சாவகச்சேரி தொகுதியின் தொழிற்சங்கவாதியும் கூட்டுறவாளருமாகிய சி.வேலு ஐயாவின் 49 ஆவது ஆண்டு நிகழ்வு குடும்பத்தினர் மற்றும் கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9 மணிக்கு கொடிகாமம் சந்தியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், பிரதேச சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற அதிபர்கள், வர்த்தகர்கள், நலன் விரும்பிகள் ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்

கொடிகாமம் பேருந்து நிலையத்தில் வைத்து 1970 ஆம் ஆண்டு துப்பாக்கியால் சுடப்பட்டு இவர் சாவடைந்தார். அந்த இடத்திலேயே நேற்று நினைவு நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது. (க-159,131)

# இலக்கிய மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடமராட்சி கிழக்குப் பிரதேச எழுத்தாளர்களிடமிருந்து இலக்கிய மலருக்கான கவிதை , சிறு கதைகள் ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவை யால் பிரதேச எழுத்தாளர்களை ஒருங்கிணைப்பதற்கும், பிரதேச எழுத்தாளர்களது எழுத்து முயற்சியை நூலுருவில் வெளிக்கொணர்வதற்கும், வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் எழுத்தாளர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக, மருதங்கேணி பிரதேச செலகத்துக்கு அனுப்பிவைக்கும்படி பிரதேச செயலர் கோரியுள்ளார்.

ஒருவர் கவிதை, சிறுகதை இரண்டையும் அனுப்பி வைக்க முடியும்.

இரண்டிலும் ஒவ்வொன்றை மட்டுமே அனுப்ப முடியும். ஆக்கங்கள் அவருடைய சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும்.

ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட ஆக்கமாகவோ பிரசுரிக்கப்பட்ட ஆக்கமாகவோ இருத்தல் கூடாது என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ரி-1)

# 10 கைப்பணி பயிற்சி நிலையங்கள் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பனை அபிவிருத்திச் சபையால் இந்த மாதத்தில் மட்டும் பத்து வரையிலான பனம் கைப்பணி பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சபையின் தலைவர் ஆ.ந.இராசேந்திரத்தால் இந்தப் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது.

இந்தப் பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் யாவும் சபையின் மூலதன நிதி ஊடாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் மூன்றும், அம்பாறையில் ஒன்றும், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவில் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் மற்றும் யாழ்ப்பாணத்தில் இரண்டுமாக மொத்தம் பத்து கைப்பணிப் பயிற்சி நிலையங்களை சபை இந்த மாதத்தில் திறந்து வைத்துள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் பனம் கைப்பணியை மேலும் ஊக்குவிக்கும் விதமாகக் கிராம மட்டங்களில் இந்தப் பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பனம் கைப்பணி பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டு, அவர்களுக்குப் பனம் கைப்பணி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டும் வருகின்றன. இந்தப் பயிற்சிகள் யாவும் தொடர்ந்து ஆறு மாதகாலங்களுக்கு வழங்கப்படும். பயிற்சியின் நிறைவில் அதற்கான சான்றிதழ் மற்றும் உதவிகள் வழங்கப்படும். பனம் கைப்பணியை ஊக்குவிக்கும் செயற்பாடாக இந்தப் பயிற்சி நிலையங்களை மேலும் ஆரம்பித்து வைக்கவும் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (க-17)

## பஞ்சரத பவனி



ஈழத்தின் பிரசித்தி பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் வண்ணை சிறிமத் வாலாம்பிகா சமேத சிறி வைத்தீஸ்வர சுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவின் பஞ்சரத பவனி நேற்றுக் காலை பக்திபூர்வமாக நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாண மாநகரசபையால் கால்வாய் துப்புரவு

யாழ்ப்பாணம், மார்ச் 21
பாசையூரில் இருந்து மகேந்திர புரம் வரைக்கும் செல்லும் கால்வாய் துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
நீண்ட காலமாகத் துப்புரவு செய்யப்படாமல் இருந்த இந்த கால்வாய் மாநகர கழிவகற்றும் பிரிவால் துப்புரவு செய்யப்படும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார். (ஐ-17)

## கந்தபுராண படிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 21
நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டுக் கந்தபுராண தொடர்படிப்பு ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.
இந்தக் கந்தபுராணப் படிப்பு எதிர் வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவுபெறும்.
அன்றைய தினம் காலை 9 மணிக்குச் சிறப்பு அபிசேகம், பூசை வழிபாடுகள் இடம்பெறும்.
ஆலயத்தின் பெருந்திருவிழா ஏப்ரல் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. (க-17)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு

# நிரந்தர கல்விப் பணிப்பாளரை நியமிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 21
நிரந்தர வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படாமையால் யாழ்ப்பாணக் கல்வி வலயம் நெருக்கடி நிலையை எதிர்நோக்கி வருகின்றது. இந்த நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் முன்னேற்ற முன்னணியின் செயலர் நாயகம் கணேஷ்வரன் வேலாயுதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாகக் காணப்படுவதால் இந்த வலயத்திலுள்ளவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். வடக்கு மாகாணத்தில் அதிகளவு பாடசாலைகளையும் அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரபல்யமான பாடசாலைகளையும் கொண்டது யாழ்ப்பாண வலயம். இந்த வலயத்துக்கு ஒரு வருடத்துக்கு மேலாக நிரந்தர கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணக் கல்வி வலய அலுவலர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வியலாளர்கள் மத்தியில் விரக்தியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநர் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (ஐ)

## தென்னை சார் கைப்பணி பொருள்களின் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,மார்ச் 21
தென்னை சார் கைப்பணி பொருள்களின் பயிற்சிநெறிகள் நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம் பிக்கப்படவுள்ளதாக தென்னை பயிர்ச் செய்கை சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம் தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
தென்னைப் பயிர்ச்செய்கை சபையானது, சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் பெண்களுக்கு அவர்களின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் வீட்டிலிருந்தவாறே கைத்தொழில் செய்வதன் மூலம் வருமானம் ஈட்டிக்கொள்வதற்கான செயற்திட்டங்களை முன்னகர்தி வருகின்றது.
அந்த வகையில் மகளிர் தினத்தை முன்னிட்டு விளக்குமாறு, துடைப்பம், சிரட்டை அலங்காரப்பொருள்கள், தென்னோலையிலான கைவேலைகள் போன்ற பயிற்சிகளை முதற்கட்டமாக நல்லூர் பிரதேசத்திலுள்ள கற்பகதரு சங்கஙளிலுள்ள பெண்களுக்கு வழங்கவுள்ளன.
இந்தப்பயிற்சிநெறியானது நாளை முற்பகல் 9.30 மணியளவில் திவ்விய ஜீவன மண்டபம் சட்டநாதர் கோவிலடி, நல்லூர் என்ற இடத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச கற்பக தரு சங்க இளம்பெண்களை கலந்து கொண்டு தங்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்திப் பயனடையவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)

## இறைச்சிக் கடைகள் ஏப்ரல் மாதம் இயங்கும்



சாவகச்சேரி, மார்ச் 21
சாவகச்சேரி நகரசபையின் இரு ஆட்டிறைச்சிக் கடைகளும் ஒரு கோழி இறைச்சிக் கடையும், ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் இயங்கவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாட்டிறைச்சிக் கடையை எடுப்பதற்கு ஒருவர் முன்வந்தபோதி லும், ஏலம் முடிந்த பின்னர் வந்ததால் அவரது விண்ணப்பம் நிரா கரிக்கப்பட்டு மீண்டும் கேள்வி கோரப்பட்டு வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளதெனத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.
சாவகச்சேரி நகரசபையால் கடந்த ஒக்ரோபர் மாதம் 2018ஆம் ஆண்டுக்கு மாட்டிறைச்சிக் கடைகள், ஆட்டிறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவது தொடர்பாக பத்திரிகைகளில் கேள்வி அறிவித்தல் கோரப்பட்டு, அதிகரித்த கட்டணம் என எவரும் குத்தகைக்கு எடுக்கமுன்வரவில்லை . அதன் பின்னர் இரு தடவைகள் மீள் கேள்வி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்ட போதிலும் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வரவில்லை.
இது தொடர்பாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்பின் பேரில் குத்தகைக் கட்டணம் குறைக்கப்பட்டு ஏலத்தில் விட அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது.
அப்போதும் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வரவில்லை. பின்னர் கேள்வித் தொகை குறைக்கப்பட்டு, கேள்வி அறிவித்தல் கோரப்பட்டுநேற்று ஏலத்தில் விடப்பட்டன.
ஏலத்தில் இரு ஆட்டிறைச்சிக் கடைகளும் ஒரு கோழி இறைச்சிக் கடையும் ஏலதாரர்களால் எடுக்கப்பட்டன எனவும், மாட்டிறைச்சிக்கடை தொடர்பான ஏலம் முடிந்த பின்னர் அரைமணி நேரம் கழித்து ஒருவர் வந்து மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்குப் பெற விண்ணப்பம் சமர்ப்பித்திருந்தார். ஏல விதிமுறைகளின் பிரகாரம் குறித்த நேரத்தில் வருகை தராததால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அடுத்தவாரம் விண்ணப்பம் கோரப்படுமெனவும், அன்றைய தினம் ஏலத்தில் விடப்பட்டு மாட்டிறைச்சிக் கடை குத்தகைக்கு வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.
தென்மராட்சிப் பிரதேசத்தில் சாவகச்சேரி நகரசபை மேற்கு சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம், மிருசுவில்,கைதடி, நாவற்குளி,வரணி போன்ற உப அலுவலகப் பிரிவுகளில் உள்ள இறைச்சிக் கடைகள் இந்த வருடத்துக்கு எவரும்குத்தகைக்குஎடுக்காததால், பிரதேச மக்கள் தமது தேவைக்காக வேறு பிரதேசங்களுக்குச் சென்று இறைச்சி வாங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (க-9)

## தமிழ் அரசுக் கட்சியின் கிளை நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 21
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதிக்கான (தீவகம்) மூலக்கிளைகளின் நிர்வாகத் தெரிவுகள் புங்குடுதீவு, வேலணை, கரம்பொன் ஆகிய இடங்களில் அண்மையில் நடைபெற்றன.
ஊர்காவற்றுறை மூலக்கிளைக்கான (முயலவள, கரம்பொன், அனலைதீவு, எழுவைதீவு) தலைவராக கனகையா (தும்பாட்டி கடற்தொழிலாளர் சங்கத் தலைவர்), செயலராக மடுத்தீன் பெனடிக்ற் (சின்னமணி), பொருளாளராக வரதராசன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
வேலணை மூலக்கிளையின் (வேலணை, சரவணை, மண்கும்பான்) தலைவராக மாணிக்கவாசகர் இளம்பிறையன், உபதலைவராக செ. ஜெயச்சந்திரமூர்த்தி, செயலராக மார்க்கண்டு தாசன், பொருளாளராக அரசரட்ணம் (ரமேஷ்), உப செயலராக குகனதாஸ் பேபிஷான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
புங்குடுதீவு நயினாதீவு மூலக்கிளையின் தலைவராக கா. குகபாலன் (பேராசிரியர்), செயலராக கருணாகரன் நாவலன் (வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்), பொருளாளராக சிங்கராசா ராஜ்குமார், உபதலைவராக க. வசந்தகுமாரன் (வேலணைப் பிரதேச சபை உறுப்பினர்), உப செயலராக லாவண்யா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொருளாளரும், யாழ்ப்பாண மாவட்டத் தலைவருமான கனகசபாபதி, வலிகாமம் மேற்கு பிரதேச சபைச் தவிசாளர் நடனேந்திரன், வாலிப முன்னணியின் செயலர் சேனாதிராசா கலைஅமுதன் ஆகியோரும் நிர்வாகத்தெரிவின்போது கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## தண்ணீர்ப் பம்பி திருட்டு

சாவகச்சேரி,மார்ச் 21
மட்டுவில் சந்திரபுரம் சிவன்கோவிலடி வயல் வெளியில் கத்தரித் தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரமொன்று திருடர்களால் களவாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றதாக விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டது.
கத்தரிப் பயிருக்குத் தோட்டக் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துவிட்டு வயல் தோட்டத்திலேயே விடப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் இயந்திரமே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. இத்திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புள்ளவர்களின் பொருள்கள் சில தண்ணீர் இறைக்கும் இயந்திரம் இருந்த இடத்தில் தவறவிடப்பட்டிருந்ததாகவும், அதனைச் சான்றாக வைத்து திருடர்களைக் கண்டுபிடித்துவிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இந்தத் திட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (க-131)

## மேலைத்தேய வாத்திய கருவிகள் வழங்கல்

சுன்னாகம், மார்ச் 21
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனால் மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வழங்கி வைக்கப்பட்டன.
கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளரும் ஆசிரியருமான பிரதாப், பாடசாலையின் அதிபர் மு.செல்வஸ்தான் மற்றும் ஆசிரியர்கள் ,மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தமது பகுதிகளிலுள்ள மணலை எடுக்க செயலர்கள் அனுமதிக்கவும்

## மணல் இன்றிக் கட்டுமானம் முடங்கும் நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பணிப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 21*

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெறும் வீட்டு திட்டம் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளுக்கு மணல் பெறுவதில் பெரும் நெருக்கடி நீடிக்கிறது. இதனால் அனைத்துக் கட்டுமானங்களும் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன். அதனால், குடாநாட்டில் உள்ள பிரதேச செயலர்கள் தத்தமது பிரிவுகளில் மணல் வளம் இருப்பின் மாதாந்தம் 100 கியூப் மணலுக்கான அனுமதியை பிரதேச செயலர்களே வழங்க முடியும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

குடாநாட்டில் மணல் தட்டுப்பாட்டை நீக்க கொங்கிரீட் வேலைக்குரிய மணல் கிளிநொச்சியிலிருந்து எடுத்து வரப்பட்டது. தற்போது வருவதில்லை. அங்கு மணல் அள்ளப்படும் பிரதேசம் வனவளத் திணைக்களத்துக்குரியது என்பதால் இந்த வருடத்துக்கான அனுமதியை அவர்கள் வழங்கியிருக்கவில்லை. வடமராட்சி கிழக்கில் சில இடங்கள், வனஉயிரிகள் திணைக்களத்தின் அளுகையில் உள்ளன. வீடுகள் கட்டுவது உட்பட ஏராளமான பணிகள் இடம்பெறுகின்றபோது, மணல் பெறுவதில் கட்டடப் பணிகளை ஒழுங்கமைப்பவர்கள் இடர்படுகின்றனர்.

இது பற்றி மாவட்டச் செயலரிடம் கேட்டபோது மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆரம்பத்தில் மண்கும்பான், அரியாலை, கெற்பேலி, நாகர்கோவில், பருத்தித்துறை, எழுதுமட்டுவாள், மாதகல் போன்ற பகுதிகளில் தேவைக்கேற்ப மணல் பெறப்பட்டது. பின்னர் அது வியாபாரமாக மாறியதால், அதிகமாக அகழப்பட்டு அந்த ஊர்களையே பாதிக்கும் நிலை ஏற்பட்டது.

இதைத் தடுக்குமாறு அந்தந்தக் கிராம மக்களே கோரினார். அதனால் அத்தனை இடங்களும் தடுக்கப்பட்டன.

இத்தகைய இடங்களில் முன்னர் தொழிற்சாலை அனுமதிகளைப்பெற்று சுற்றாடல் அதிகார சபையின் வரையறையின்றி வகை தொகையற்ற முறையில் மணல் அகழப்பட்டமையே மக்களின் அச்சத்துக்குக் காரணமாக அமைந்தது. அகழ்ந்தவர்களின் அசமந்தம் அல்லது பணம் உழைக்கும் நோக்கம் சில கிராமங்களை பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கியது.

உள்ளூர் மக்களின் வீட்டுத் தேவை உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கருதி மணல் பெறுவது கட்டாயமாக உள்ளது. பாதிப்பு ஏற்படாத வகையில் பல கிராமங்களை நேரில் சென்று பார்வையிட்டதோடு சுற்றுச் சூழல் அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றின் சிபார்சின் அடிப்படையில் குறிப்பிட்டளவு மணலை மட்டும் பெற ஏற்பாடு மேற்கொண்டோம். இருப்பினும் முன்னர் ஏற்பட்ட அனுபவத்தால் மணல் எடுக்க முடியாது என்று கிராம மக்கள் பல இடத்தில் விடாப்பிடியாகவே இருந்தனர்.

இதற்கும் மாற்றீடாக எந்தக் காரணம் கொண்டும் வெளியார் மணல் அகழ முடியாது எனவும், அந்தக் கிராமத்தின் பொது அமைப்புக்களே அகழ்ந்து வெளிப்புறம் எடுத்து வந்தே பார ஊர்திகளுக்கு வழங்கும் நடைமுறையை ஏற்படுத்தினோம். இதன் மூலம் அந்த கிராமத்துக்கு நேரடி வருமானமும் கிராம இளையோருக்கு வேலை வாய்ப்பும் ஏற்படுத்தியதால் மணல் திருடர்கள் பலர் தடுக்கப்பட்டனர். இதன் காரணமாக சில இடங்களில் மணல் திருடர்கள் கிராம மக்களை தவறாகத் திசை திருப்பி சீரான முறையில் மணல் பெறும் இடத்தையும் தடுப்பதோடு அந்த இடங்களில் இரவு வேளைகளில் களவாக மணல் அகழ்கின்றனர்.

இவ்வாறு மண்கும்பானின் ஓர் இடம், அரியாலையில் ஓர் இடம், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஓர் இடம், வடமராட்சி கிழக்கிலும் உண்டு. இதனால், மாதாந்தம் குறைந்த பட்சம் 4 ஆயிரம், 5 ஆயிரம் கியூப் மணல் தேவைப்படும் மாவட்டத்துக்கு ஓர் இரு இடத்தில் 200 கியூப் மட்டுமே பெறும் சூழ்நிலை காணப்படுகின்றது.


இதனால் தற்போது புவிச்சரிதவியல், கரையோரப்பாதுகாப்புதிணைக்களம், சுற்றுச் சூழல் அதிகார சபை, பிரதேச செயலர், பொலிஸார், உள்ளூர் அமைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கி சுற்றாடல் குழு உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது. இருப்பினும் வீதி வேலைகளுக்கான கிரவல் மணல் மற்றும் ஆற்று மணல் என்பன குடாநாட்டில் அறவே கிடையாது.

இவற்றைச் சீர் செய்ய பல முயற்சிகளை நாம் ஏற்பாடு செய்து வழி வகைகளைக் கூறும்போது அதற்கு ஒத்துழைக்காத பலர், அதனைத் தடுக்கவும் விமர்சனத்துக்கும் மட்டுமே முன்வருகின்றனர். இதனை அரசியலாக்கவும் சிலர் முயற்படுகின்றனர். எது எவ்வாறாயினும் மணல் பெற நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும் என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார். (த-105)

# தவறிழைத்த தராசால் மயங்கி வீழ்ந்த பெண்

*மாவட்டச் செயலகத்தில் சம்பவம்*

கிளிநொச்சி, மார்ச் 21



ஒரே இரவில் உடல் நிறை16 கிலோவால் அதிகரித்துள்ளதாகத் தராசு காட்டியதால் அதைப் பார்த்த குடும்பப் பெண் மயங்கிச் சரிந்து வீழ்ந்தார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி மாவட்டச் செயலக போக்குவரத்துப் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அரச அலுவலரான அந்தப் பெண், சாரதி அனுமதிப் பத்திர காலாவதித் திகதி நிறைவடைந்துவிட்டது என்பதால் அதனைப் புதுப்பிக்கவேண்டிய தேவை ஏற்பட்டது.

அதற்கு முதல்நாள் மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்காக மருத்துவ பரிசோதனை பெறச் சென்றிருந்தார். அங்குள்ள தராசில் நிறையைச் சோதித்தபோது 70 கிலோக்கிராம் நிறை காட்டியது.

மறுநாள் மாவட்டச் செயலக போக்குவரத்துப் பிரிவுக்குச் சென்றிருந்தார். அங்குள்ள தராசில் நிறையைச் சோதித்தபோதே அது காட்டிய நிறையை அவதானித்ததும் மயங்கிச் சரிந்து வீழ்ந்தார்.

காரணம், அந்தத் தராசு வழமையாகவுள்ள நிறையைவிட மேலதிகமாக 16 கிலோக்கிராம் நிறையை அதிகரித்துக் காட்டியுள்ளது. ஒரே இரவில் தனது நிறை 16 கிலோக்கிராமால் அதிகரித்துவிட்டதா என்று ஏங்கி அவர் மயங்கி வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், அந்தத் தராசில் தவறு உள்ளது உரிய முறையில் சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது.

அவரது மயக்கத்தைத் தெளியவைத்து அருகில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் காணப்பட்ட தராசில் நிறையை பார்த்தபோது முதல்நாளில் காட்டியதுபோன்று 70 கிலோக்கிராம் நிறை காட்டியுள்ளது. அவரை அழைத்துச் சென்றவர் இதைத் தெரிவித்தார். அரச திணைக்களமான மாவட்ட போக்குவரத்து அலகில் தினமும் சாரதிய அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக பெருமளவு மக்கள் வரும் இடத்தில் தராசு சிறந்ததாக இருக்க வேண்டும் என்பது பலரதும் எதிர் பார்ப்பு. (த-9)

### வலி.தென்மேற்கில் உள்ள
# சட்டவிரோத கட்டடங்களை உடன் அகற்ற வலியுறுத்து

வலி.தென்மேற்கு, மார்ச் 21

பிரதேச சபையின் அதிகாரத்தைப் பயன்படுத்தி சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களைப் பொலிஸாரின் உதவியுடன் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் கே.அச்சுதன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபை மண்டபத்தில் அண்மையில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலம் தாழ்த்தப்படுமானால் சட்டவிரோதக் கட்டடங்கள் மழைக்கு முளைத்த காளான்கள் போல் நாளுக்குநாள் உருவாகும். இதனால் பிரதேசத்தின் அபிவிருத்தியில் தடங்கலும் தாமதமும் ஏற்பட வாய்புள்ளது.

எனவே அடுத்து வரும் தேர்தலை மையப்படுத்தி செயற்படாமல் பிரதேசத்தின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். எமது பிரதேசம் தரமுயர்த்தப்படவிருக்கும் இந்த வேளையில் சட்டவிரோதக் கட்டடங்கள் இதற்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன.

சட்டவிரோதக் கட்டடங்கள் சம்பந்தமாக நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுப்பதனால் காலதாமதம் ஏற்படுகின்றது. இந்த நிலை சம்பந்தப்பட்டவர்களுக்குச் சாதகமாக அமைகின்றது. மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் மக்கள் எங்களைத் தெரிவு செய்து அனுப்பியிருக்கிறார்கள்- என்றார். (ஐ-115)

## மணவாளக்கோலமும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ்ப்பாணம் நீராவியடி சிறி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மணவாளக்கோலமும் குடமுழுக்கு மலர் வெளியீட்டு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறும். மாலை 4 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு பூசைகள் நடைபெற்று,வசந்த மண்டபப்பூசை திருவூஞ்சல் என்பன இடம்பெறும். தொடந்து குடமுழுக்கு மலர் வெளியிடப்படும்.

அதன்பின்னர் விநாயகப் பெருமான் பூந்தண்டிகையில் உள்வீதி,வெளிவீதி உலா வருதல் என்பன இடம்பெறும் என்று ஆலயப் பொறுப்பாளர் வை.இரகுநாதமுதலியார் அறிவித்துள்ளார். (ஐ)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ்ப்பாணம் கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோலம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7.30 மணிக்கு அம்பாளுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிசேகமும், பரிவார மூர்த்திகளுக்கு சிறப்பு அபிசேகமும் இடம்பெறும். அதனைத் தொடந்து அம்பாள் உள்வீதீ,வெளிவீதி வலம் வருதல் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# அதிபரை மாற்றக் கோரி மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21



பாடசாலை அதிபரை மாற்றுமாறு கோரி ஊர்காவற்துறை நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலய மாணவர்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்ததாவது:

காலை பிரார்த்தனை முறைப்படி நடப்பது இல்லை. மாணவர்களது முயற்சியால்தான் காலை பிராத்தனைகள் நடைபெறுகின்றன. அதிபர், ஆசிரியர்களை காலையில் வந்தவுடனேயே பேச ஆரம்பித்து விடுவர். ஆசிரியர்கள் வகுப்பில் படிப்பித்து கொண்டு இருந்தால்,அதிபர் வரட்டாம் என்று செல்வார்கள், பாடவேளை நிறைவு பெற்றாலும் ஆசிரியர்கள் வகுப்பில் வர மாட்டார்கள் - என்றனர்.

போராட்டம் தொடர்பில் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ள கடிதத்தில், "மாணவர்களை கள்ளர் என்று கூறுவதுடன் பனைமரம் ஏறி கிளி பிடிக்க சொல்கிறார். ஆசிரியர்களை மாணவர்களுக்கு முன்னால் வைத்து இழிவாகப் பேசுகிறார். காலை பிரார்த்தனைக்கு தானும் வருவதில்லை, ஆசிரியர்களையும் வர விடுவதில்லை. இவ்வாறு பாடசாலையை செயற்படுத்த முடியாத அளவுக்கு அதிபர் நடந்து கொள்கிறார். அதிபரை மாற்றும் வரைக்கும் போராட்டம் தொடரும் என்றுள்ளது. பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, மாணவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சம்பவம் எதுவும் பாடசாலையில் நடைபெறவில்லை - என்றார். (ஐ-7,21,26)

# கொள்ளைக் குற்றச்சாட்டில் மற்றொருவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வீடு புகுந்து கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய நபர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்த 27 வயதுடைய அவரை, 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது. அவர் பல வன்முறைகளில் தொடர்புபட்டிருந்தார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். தெல்லிப்பழை கட்டுவனில் அண்மையில் அரச அலுவலரின் வீடு புகுந்து, அங்கிருந்தவர்களைக் காயப்படுத்தி பணம், நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் ஏற்கனவே இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து ஒரு தொகைப் பணம், நகைகள் மீட்கப்பட்டன. (த-26)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கரைச்சிப் பிரதேசத்தில் யாசகம் எடுக்கத் தடை

## பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதாரம் வழங்க பிரதேச சபை நடவடிக்கை

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், பொது இடங்களில் யாசகம் எடுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 1ஆம் திகதியில் இருந்து இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என்று சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கரைச்சிப் பிரதேச சபையில் கடந்த அமர்வின் போது பிச்சை எடுப்போரைத் தடுத்தலும் அவர்களுக்கு நல்வழிகாட்டலும் எனும் தீர்மான வரைபு கொண்டுவரப்பட்டது. வன்னேரிக்குளம் வட்டார உறுப்பினர் நா. செல்வநாயகம் அதைக் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானம் வரைவு தொடர்பில் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றன. ஆன்மீகத்தின் முன்னோடிகளான சித்தர்கள், யோகிகளும் அக்கால ஆச்சிரமங்கள், சத்திரங்கள், தர்மஸ்தாபனங்கள் என்பன பற்றி விமசிக்கப்பட்டது. இறுதியில் தவிசாளர் அநாதரவான நிலையில் யாசகம் எடுப்போரை அணுகி உரிய இல்லங்களில் சேர்ப்பதற்கும் வாழ்வாதாரத்தின் தாக்கத்தால் யாசகம் எடுப்போரை இனம்கண்டு அவர்களுக்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கும் சபை மேற்கொள்ளும் என்று தெரிவித்திருந்தார். தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அதையடுத்து எதிர்வரும் 1ஆம் திகதியில் இருந்து கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் யாசகம் எடுப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த தவிசாளர்;

கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அமைவாக கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் யாசகம் செய்தல் யாசகத்தை ஊக்குவித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. யாசகம் செய்பவர்களில் யாராவது யாசகம் எடுக்காததால் அவர்களது குடும்ப வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என கருதுகிறார்களாயின் அவர்கள் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்தில் பதிவு செய்வதனூடாக அவர்களுக்கான நல் வழிகளை காண்பிக்கும் நடைமுறையும் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படும். யாசகம் செய்வதைத் தொழிலாக மேற்கொள்ளும் நபர்களுக்கு வாழ்வாதாரம்செய்ய சபை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது தவிர கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்கு வெளியே இருந்து வந்து இப் பகுதியில் யாசகம் செய்வது தவிர்க்க வேண்டும். அது தவிர பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வர்த்தக நிலையங்கள் சேவைச் சந்தை மற்றும் பொது இடங்களில் யாசகம் செய்தல்தடைசெய்யப்பட்டுள்ளது-என்றார்.(எ-21,6,222)

## நுண்கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்

வவுனியா,மாரர்ச் 21

வடமாகாணத்தில்தனியார்நுண்கடன்நிதிநிறுவனங்களிடம் அடிமைப்பட்டு சித்திரைவதைப்படும் பெண்களின் கடனை தள்ளுபடி செய்ய வலியுறுத்தி நேற்று கையெழுத்துப் போராட்டம் வவுனியா சிதம்பரபுரம் கற்குளம் படிவம் ஒன்று பழனி முருகன் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் ஒன்றியம், உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் வடபகுதியில் தொடர்ந்து இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தில் பெற்றுக்கொள்ளப்படும் கையெழுத்துக்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. வடபகுதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டம் தென் பகுதியிலும் அங்குள்ள அமைப்பினருடன் இணைந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 8 ஆம் திகதி பன்னாட்டு பெண்கள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நுண்நிதிக் கடனுக்கு எதிராக பேரணி ஒன்று இடம்பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. நேற்று ஆரம்பிக்கப்பட்ட கடனை தள்ளுபடி செய்ய வலியறுத்திய கையெழுத்துப் போராட்டத்தில் அப்பகுதியிலுள்ள பெருமளவான பெண்கள் கலந்துகொண்டனர். (க)

## நல்லிணக்கத்துக்கான அங்கப்பிரதட்சணம் நிறைவு

மன்னார், மார்ச் 21

இலங்கை மக்களிடையே சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்பட வேண்டி கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி இந்த அங்கப்பிரதட்சணம் நிகழ்வு தள்ளாடியில் வைத்து குருஜியால் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக திருக்கேதீச்சரம், மாந்தை மாதா கோவில், மடுதேவாலயம், அதனைத்தொடர்ந்து மதவாச்சி சென்று இறுதியாக கடந்த 18 ஆம் திகதி 41ஆவது நாள் அநுராதபுரம் சிறி மகாபோதி விகாரையில் நிறைவு பெற்றது.

இறுதி நிகழ்வில் அநுராதபுரம் விகாராதிபதி தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் அநுராதபுரம் மாவட்டச் செயலர் மற்றும் கிராமஅலுவலர்களும் நான்கு மதத் தலைவர்களும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (க-213)

## தவக்கால தியானங்கள்

### பகிர்ந்து வாழ்வோம்

ஏழை இலாசரும் - பணக்காரனும் என்னும் இயேசுவின் உவமை நற்செய்தியானது உலகில் ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் உள்ள இடைவெளியைக் காட்டுகிறது. செல்வர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஏழைகள் சபிக்கப்பட்டவர்கள் என்னும் நம்பிக்கை ஓங்கியிருந்த காலத்தில் சமயத்துக்கும் மனிதத்துக்கும் இடையே இருந்த பள்ளத்தாக்கைப் படம்பிடித்துக் காட்டுக்கிறது. இந்தநிலை இன்னும் தொடர்கதையாகக் காணப்படுகிறது.

பணம் படைத்தோர் ஆடம்பரம், கேளிக்கைகள், சொகுசு என்ற கோட்டைக்குள் முடங்கிவிடுகின்றார்கள். இவைகளே அவர்களது ஆன்மிகத்துக்கும் மனித நேயத்துக்கும் தடுப்புச் சுவர்களாகி விடுகின்றன. எவ்வளவு வைத்திருக்கின்றோம் என்பதைவிட எதற்காக வைத்திருக்கின்றோம் என்பதே முக்கியமானது.

சகோதரத்துவ உணர்வு எம்மில் ஓங்கியிருந்தால் பதுக்கும் எண்ணம் பறந்துவிடும் கொடுத்ததெல்லாம் கொடுத்தான். யாருக்காகக் கொடுத்தான், ஒருத்தனுக்கா கொடுத்தான்: இல்லை ஊருக்காகக் கொடுத்தான் என்னும் பொது நலம் ஒட்டிக்கொள்ளும். அப்போது உலகம் சமநிலை பெறும். உயர்வு தாழ்வில்லா நிலைதோன்றும்.

இவ்வாறு இலாசர்களைக் கைதூக்கி விடுவோர் பேறு பெற்றோர். அவர்கள் நீர் அருகில் நடப்பட்ட மரத்துக்கு ஒப்பாவர். அது நீரோடையை நோக்கி வேர் விடுகிறது. வெப்பமிகு நேரத்தில் அதற்கு அச்சமில்லை. அதன் இலைகள் பசுமையாய் இருக்கும். வரட்சிமிகு ஆண்டிலும் அதற்குக் கவலை இராது. அது எப்போதும் கனி கொடுக்கும். இலாசருக்குக் கிடைத்ததுபோல் ஆபிரகாம் மடி என்ன ஆண்டவர் மடியே தான் தருமம் செய்வோர் அமரும் சிம்மாசனமாகும்.

- எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.



## மணல் ஏற்றியோர் கைது

கிளிநொச்சி ,மார்ச் 21

அனுமதிபத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு உழவியந்திரங்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனையிறவுப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மணல் அகழ்ந்து ஏற்றிய உழவியந்திரத்தையும் அதன் சாரதியையும் கைது செய்த பொலிஸார் மன்றில் முற்ப்படுத்திய போது அவரை ஒருவாரத்துக்கு விளக்கமறியலில் வைக்க மன்று உத்தர விட்டது.

அதே போல் முகமாலைப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய உழவியந்திரத்தையும் அதன் சாரதியையும் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணையின் பின்னர் மன்றில் முற்ப்படுத்திய போது அவரையும் விளக்கமறியலில வைக்க மன்று உத்தரவிட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-6)

## சாதகமான தீர்ப்பு வராவிடின் சாத்வீகப் போராட்டம் நடக்கும்

### மன்னார் நகர சபைத் தலைவர் தெரிவிப்பு

மன்னார் கடற்கரைப் பூங்காக் காணி தமது காணி என்று நகர சபையும் பிரதேச சபையும் பிடுங்குப்பட்டு வரும் நிலையில், எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும் நீதிமன்ற வழக்கு தமக்குச் சாதகமான முடிவைத் தராதுவிடில், பொது அமைப்புக்கள், பொதுமக்கள், சங்கங்கள் ஒன்றிணைத்து அதை மீட்க நில மீட்புக்கான சாத்வீகப் போராட்டங்களை மேற்கொள்வோம் என்று நகர சபை தெரிவித்துள்ளது.

குறித்த கடற்கரைப் பூங்காக் காணி தொடர்பில் பிணக்கு ஏற்பட்டுள்ள நிலையில், பொது மக்கள், பொதுச்சங்கங்களின் வேண்டுகோளுக்கு அமைவாக கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது.

மன்னார் நகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில், சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்கள், சங்கங்கள், புத்தி ஜீவிகள் கருத்துக்களையும் ஆதங்கமும் தெரிவித்திருந்தனர்.



அது பற்றிய அறிக்கையை மன்னார் நகர சபைத் தலைவர் எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் உரிய திணைக்களங்களுக்கும், அரசியல் பிரதிநிதிகளுக்கும் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறித்த காணி பரம்பரை பரம்பரையாக மன்னார் பட்டின மீனவர்கள், பொது மக்கள் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டு வந்த இடம். இதனை பிறிதொருவருக்கு விட்டுகொடுக்க முடியாது.

குறித்த காணியை நகர சபை பல வருடங்களாகப் பராமரித்து வருகிறது. அதன் சகல உரிமைத்துவங்களையும் சபை கொண்டுள்ளதோடு, ஆட்சியதிகாரத்தையும் அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொண்டும்வருகின்றது.

குறித்த பகுதி நகரசபை, பிரதேச சபையாகப் பிரிக்கப்படும்போதுநிலப்பரப்பல்லாது கடற்பரப்பாகக் காணப்பட்ட பகுதி. இந்தக் கடல் மன்னார் நகரசபைப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரிய கடை, பனங்கட்டுக் கொட்டு மக்களின் பூர்வீக மீன்பிடி பிரதேசமும், வள்ளம் கட்டும் இடமுமாகும். இதை எந்தக் காரணம்கொண்டும்பிரதேச சபைக்குவிடுவிக்கமுடியாது.

அங்கு எல்லையிடப்பட்ட போதும் மன்னார் நகரசபை எல்லைப் பிரதேசமாக ஏ14 பாதையில் வந்து ஏறுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. பல முயற்சிகளின் மூலம் குறித்த செயற்றிட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபை மூலமாக அபிவிருத்தி செய்ய இருக்கும் வேளையில் குறித்த அபிவிருத்தியை இல்லாமல் செய்யும் நிலையை ஏற்படுத்தியிருக்கும் மன்னார் பிரதேச சபையை வன்மையாக கண்டிக்கிறோம் - என்றுள்ளது. (த-56)

## காட்டுப்பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

ஹொரவப்த்தான முதன்மை வீதி, பன்மதவாச்சி காட்டு பகுதியில் இருந்து நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பன்குளம், பன்மதவாச்சி பகுதியை சேர்ந்த 37 [illegible] துலிங்கம் சிறிதர் என்பவரே [illegible] மீட்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. வீட்டிலிருந்து காட்டு பகுதிக்கு முச்சக்கரவண்டியில் சென்றிருந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ-222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரத்து 100 விவசாயிகளுக்கு மழைவெள்ள இழப்பீட்டு உதவி

முல்லைத்தீவு,மார்ச் 21
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட மழைவெள்ளம் காரணமாகப் பல நூற்றுக்கணக்கான விவசாயிகளின் விவசாய செய்கை அழிவடைந்தன. அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஆயிரத்து 100 விவசாயிகளின் விவசாய செய்கை அழிவடைந்துள்ளமை, காப்புறுதி நிறுவனத்தின் அலுவலர்களால் நேரடியாகப் பார்வையிட்டு அறிக்கையிடப்பட்டுள்ளன.
இந்த விவசாயிகளுக்கான இழப்பீட்டு நிதிகள் கட்டம் கட்டமாகக் கிடைக்கப்பெறவுள்ளன. ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அதிகளவான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் 34.5 மில்லியன் ரூபா ஆயிரத்து 100 விவசாயிகளுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது என ஒட்டுசுடுட்டான் கமநலசேவைகள் திணைக்கள அலுவலர் தெரிவித்தார். (க-ரி3)

# வவுனியா தெற்கில் சிகரெட்டுக்குத் தடை

வவுனியா,மார்ச் 21
வவுனியாதெற்கு தமிழ்ப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் து.நடராயசிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்தகநிலையங்களில் சிகரெட் பாவனையை முற்றாகத் தடைசெய்ய வேண்டும் எனப் பிரதேச சபை உறுப்பினர் கா.பார்தீபனால் கடந்த மாதம் நடைபெற்ற சபை அமர்வில் பிரேரணை ஒன்று முன்வைக்கப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாக பிரதேச சபைக்கு அதிகாரங்கள் இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அடுத்து வருகின்ற அமர்வில் அதனை தீர்மானமாக எடுக்கலாம் என்றும் சபை உறுப்பினர்களால் கடந்த அமர்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் நேற்று முன்தினம்நடைபெற்றசபை அமர்வில் விடயம் ஆராயபட்டதுடன் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து வர்த்தக நிலையங்களிலும் சிகரெட் பாவனையைத் தடைசெய்வது என ஏகமனதாக தீர்மானம் மேற்கொள்ளபட்டுள்ளது. (க-110)

# அலுகோசு பதவிக்கு நேர்முகப் பரீட்சை

முல்லைத்தீவு,மார்ச் 21
சாவுத் தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கான நேர்முகப் பரீட்சைகளை எதிர்வரும் 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சாவுத்தண்டனையை நிறைவேற்றும் அலுகோசு பதவிக்கான நேர்முகப்பரீட்சைகள் 20, 21ஆம் திகதிகளில் நடைபெறவிருந்தது. சில காரணங்களுக்காக நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.
கிடைத்த விண்ணப்பங்களிலிருந்து 79 விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக, நீதிமன்றம் மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.
அலுகோசுபதவிக்காக102விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.
அமெரிக்கப் பிரஜை ஒருவரும் அலுகோசு பதவிக்கு விண்ணப்பித்துள்ளார்.
நேர்முகப்பரீட்சையின் பின்னர் அலுகோசு பதவிக்கு இருவர் தெரிவுசெய்யப்படுவர் எனவும் அமைச்சின் மூத்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.
போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளின் பெயர்ப்பட்டியல் கடந்த ஜனவரி 25 ஆம் திகதி அரச தலைவர் செயலகத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. (க-222)



# முன்பள்ளிக் கட்டடம் திறந்துவைப்பு

வவுனியா,மார்ச் 21
வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நெடுங்கேணி தெற்கு கிராம அலுவலர் பிரிவின் இறம்பைக் குளம் கிராமத்தின் ஆற்றலேன் முன்பள்ளிக் கட்டடம் முன்னாள் பிரதி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தானால் 15 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு நேற்று உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.
நீண்ட காலமாக முன்பள்ளி சிறார்களின் கல்வி நடவடிக்கையில் சிரமத்தை ஏற்படுத்தியிருந்தகட்டடம்இல்லாப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கிலேயே முன்பள்ளி கட்டடமானது குறித்த கிராமத்துக்குநாடாளுமன்ற உறுப்பினரால் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. (க)

# விளையாட்டு நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 21
பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் வண்ணாங்கேணி சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு 17ஆம் திகதி இடம்பெற்றது .
பாடசாலை முதன்மை ஆசிரியர் ராஞ்சி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரே னும், சிறப்பு விருந்தி னர்களாக பிரதேச சபை உப தவிசாளர் மு.கஜன், கிராம அலுவலர்களான சுபாஷினி, சுதர்சன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-6)

# 12 இலட்சம் கிலோ நெல் கொள்வனவு

முல்லைத்தீவு,மார்ச் 21
ஒட்டுசுட்டான் பகுதியில் விவசாயிகளிடம் இருந்து 12 இலட்சம் கிலோவுக்கும் அதிகமான நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கடந்த ஆண்டு பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு விவசாயிகள் அறுவடை செய்து விற்பனை செய்துள்ளார்கள்.
இந்த நெல் கொள்வனவில் விவசாய அமைச்சு ஒரு விவசாயியிடம் இருந்து இரண்டாயிரம் கிலோ நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது.
சம்பா 41 ரூபாவுக்கும் நாடு 38 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டது.
ஒட்டுசுட்டான் பிரதேசத்தல் அமைக்கப்பட்ட நெல் கொள்வனவு களஞ்சியத்தில் 12 இலட்சத்து 40 ஆயிரம் கிலோ நெல்லை 620 விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நெல் களஞ்சியம் நிரம்பியுள்ளது. இருந்தும் அதிகளவு விவசாயிகள் பச்சை நெல்லாகத் தனியாருக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நெல்லைக் கொள்வனவு செ[illegible]தமையால் விதைத்து அறுவடை செய்த அனைத்து நெல்லையும் நெல்கொள்வனவு பகுதிக்கு கொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாகவே தனியாருக்கு குறைந்த விலையில் நெல்லை விற்பனை செய்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (க-ரி3)

# கற்றல் உபகரணங்கள் மாணவருக்கு கையளிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 21
முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட வறுமை கோட்டின் கீழ்வாழும் மக்களை கொண்ட பூதன் வயல்,மற்றும் ஆறுமுகத்தான் குளம் கிராம பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முன்தினம் அப்பியாசக் கொப்பிகள் ஒரு தொகுதி வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
பூதன்வயல் அ.த.க.பாடசாலை மற்றும் ஆறுமுகத்தான் குளம் அ.த.க.பாடசாலைகளில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாடசாலை அதிபர்,மற்றும் கிராம அலுவலகர்களுடன் ஐக்கியதேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் றிசாம் ஜமால்தீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க - ரி3)



# கற்றல் உபகரணம் கையளிப்பு

வவுனியா, மார்ச் 21
முல்லைத்தீவு தண்டுவான் அ.த.க. பாடசாலை மாணவர்கள் 15 பேருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
பெல்ஜியம் நாட்டில் வசித்து வரும் அசோக் கீர்த்திகா தம்பதியினரின் புதல்வர்களான அதன்யா, வியான் ஆகியோரின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவர்களால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
கற்றலுக்கான இடர்களை எதிர்நோக்கியுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் புத்தகப் பைகள், அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ஐ-222)

# பாடசாலைக்கு பாதுகாப்பு மதில்

பளை, மார்ச் 21
பளை மத்திய கல்லூரியில் கிராமிய உட்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் முன்மொழிவுக்கு அமைவாக சிறப்பு கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பாடசாலைக்கான பாதுகாப்பு மதில் அமைப்புக்கென 1.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
13 வருடங்கள் உத்தரவாதமளிக்கப்பட்ட, கல்வி வேலைத்திட்டத்தின் கீழ், உயர்தரத்தில் தொழிற்பயிற்சி பாடநெறியை நடைமுறைப்படுத்துவதற்காக, மூன்று வகுப்பறைகளைக் கொண்ட திறன் வகுப்பறைக்கட்டடம் ட் ஒன்றை அமைப்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அதிபர் க. உதயகுமாரன் தெரிவித்துள்ளார். (க-9)





# முழுநிலா நாள் கலை நிகழ்வுகள்

வவுனியா,மார்ச்.21
வவுனியா தெற்குவலயகல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் முழுநிலா நாள் கலை நிகழ்வுகள் வவுனியா நகரசபை கலாசாரமண்டபத்தில் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு நடைபெற்றது.
தெற்குவலயகல்வி பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்டச்செயலர் எம்.கனீபா கலந்துகொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக சிங்கள பிரதேச செயலர் எஸ். ஜானக,உதவிக்கல்வி பணிப்பாளர் எஸ். சிவசிவா, மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.பி.நடராஜா,ஓய்வு பெற்ற உதவிக்கல்வி பணிப்பாளர் ஆ.இந்திரலிங்கம், ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதன்போது வவுனியா தெற்கு வலயத்துக்குட்பட்ட மூவினத்தையும் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கீரி கடற்கரையில் ஐஸ் போதைப்பொருள் மீட்பு

## அவற்றின் பெறுமதி 2 கோடி ரூபா என்று பொலிஸார் தெரிவித்தனர்

மன்னார், மார்ச் 21

மன்னார் கீரி கடற்கரைப் பகுதியில் இரண்டரைக் கோடி ரூபா மதிப்புள்ள ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மன்னார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் கீரி கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறித்த பகுதியில் தேடுதல் நடத்தியபோது இரண்டரைக் கோடி ரூபா மதிப்புள்ள ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றபட்டுள்ளது என்றும் இதில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் இது சம்பந்தமாக தேடுதல் நடைபெறுவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மன்னார் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி கங்காபதி ஆர்த்தன், உபபொலிஸ் பரிசோதகர் சிறிரீனிக்க மற்றும் விக்ரமரெட்ண மாருக்கோ, லயனல் பத்திராஜா, ஜந்திகா விமுக்தி, கஜரூபன் கிமல்சன், இசுறு தசநாயக்க



உள்ளிட்ட பொலிஸ் அலுவலர்கள் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டமை தொடர்பில் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-213)



நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 2 மில்லியன் ரூபா செலவில் நாச்சிமார்கோவில் சுற்றுவீதி சீரமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரபாதம் சரவணபவன், மாவை சேனாதிராசா உள்பட சனசமூக நிலைய நிர்வாகிகள், பக்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-7)

## மகேந்திரனைத் திருப்பியனுப்ப நடவடிக்கைகள் எடுக்கவில்லை

# மைத்திரியின் குற்றச்சாட்டை நிராகரித்த சிங்கப்பூர் அரசு



கொழும்பு, மார்ச் 21

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்டு சிங்கப்பூரில் தங்கியுள்ளார் என்று சொல்லப்படும் அர்ஜுன் மகேந்திரனை திருப்பி அனுப்ப ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்ற மைத்திரியின் குற்றச்சாட்டை சிங்கப்பூர் நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சிங்கப்பூர் அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர், இது தொடர்பில் கடந்த ஜனவரியில் இருந்து விசாரணைகள் இலங்கையுடன் இணைந்து நடத்தப்படுவதாகவும் ஆனால் இது சம்பந்தமான உரிய ஆவணங்கள் எதுவும் இலங்கையிடம் இருந்து இதுவரை கிடைக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

'உரிய ஆவணங்கள் ஆதாரங்கள் கிடைத்தால் எங்கள் நாட்டின் சட்டப்படி நடவடிக்கைகளை எடுப்போம். அப்படியில்லாமல் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் அர்த்தமில்லை' என்றும் அந்தப் பேச்சாளர் குறிப்பிட்டார். (ம)

# சிவனொளிபாதமலையின் பெயர்ப்பலகை விசமிகளால் தாரூற்றி சேதமாக்கப்பட்டது!

கொழும்பு, மார்ச் 21

சிவனொளிபாதமலையின் அடிவாரத்தில் மஸ்கெலியா பிரதேச சபையால் வைக்கப்பட்ட பெயர்ப் பலகை விசமிகள் சிலரால் தார் ஊற்றிச் சேதமாக்கப்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் நேற்றுப் பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

சிவனொளிபாதமலை என மும்மொழியில் எழுதப்பட்டிருந்த பெயர் பலகையில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி எழுத்துகள் தார் ஊற்றி மறைக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து, மஸ்கெலியா



பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளனர். அங்கு ஏற்பட்டிருந்த பதற்ற நிலையை பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததையடுத்து, பெயர் பலகையைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

முன்னதாக சிவனொளிபாதமலை என்றிருந்த பெயர் சிறிபாத என்று மாற்றப்பட்டது. எனினும் மஸ்கெலியா பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமைய மீண்டும் சிவனொளிபாதமலை என எழுதப்பட்டிருந்தது. இதையடுத்தே பெயர்ப் பலகைக்கு தார் ஊற்றப்பட்டுள்ளது. (ம)

# கஞ்சா போதைப்பொருள் குடாநாட்டில் சாதாரண விற்பனைப் பொருளாகிறதா

## 4 நாள்களில் 110 கிலோ கஞ்சா மீட்பு 13 சந்தேக நபர்களும் கைதாகினர்



யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கஞ்சா போதைப் பொருள் சாதாரண விற்பனைப் பொருளாக மாறிவிட்டதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் பரவலாக எழுந்துள்ளது. கடந்த நான்கு நாள்களில் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் 110 கிலோக் கிராமுக்கும் அதிகமான கஞ்சா போதைப் பொருள்கள் பொலிஸார், புலனாய்வுப் பொலிஸார், கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**சாவகச்சேரியில் நேற்று**

சாவகச்சேரியில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகமுள்ள நகரப்பகுதிகளில் நேற்றையதினம் கஞ்சாபோதைப் பொருள் சாதாண பொருள்களைப் போன்று விற்பனை செய்யப்பட்டுள்ளது. சிறிய பொதிகளாகச் சுற்றப்பட்டு கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நுணாவில், சாவகச்சேரி பேருந்து நிலையம், கச்சாய் வீதி போன்ற இடங்களில் இருந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**அரியாலையில் 9 கிலோ கஞ்சா**

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியிலும் நேற்று அதிகாலை 9 கிலோக்கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அரியாலைப் பகுதியில் கஞ்சா கைமாற்றப்படுகிறது என்று யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அதன் பொறுப்பதிகாரி ஜெருசன் தலைமையிலான குழுவினரால் கஞ்சா மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக். கப்பட்டுள்ளது. இதேவேளை யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் 10 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை வல்வெட்டித்துறையில் கஞ்சா மீட்கப்பட்டது. பருத்தித்துறை திக்கம் கடற்கரையில் 88 கிலோக்கிராம் கஞ்சா பருத்தித்துறைப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

**மக்கள் விசனம்**

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் கஞ்சா விற்பனை செய்யப்படுகிறது. ஆனாலும் பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரிடம் சிக்குவதோ சிறிதளவானவையே என்ற குற்றச்சாட்டுக்கள் மக்களிடமிருந்து முன்வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள், இளைஞர்களை குறிவைத்தே கஞ்சா விற்பனை செய்யப்படுகிறது. அரச தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தை அடுத்தே பெருமளவான கஞ்சா, மற்றும் போதைப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் மீட்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படும் கேரளக் கஞ்சாவே அதிகமாக மீட்கப்பட்டுள்ளன. கஞ்சா விற்பனை செய்யும் ஒருவரிடம் இருந்து விசாரணைகளை ஆரம்பித்தால் அடுத்தடுத்த நபர்கள் யார் என்று தெரியவரும், அவர்களை இயக்குவது யார் என்று தெரியவரும் ஆனால் பொலிஸாரோ கஞ்சா விற்பனை செய்பவர்களிடம் விசாரித்துவிட்டு அவருக்கு வழங்கியவர்களை தெரியாது என்று கூறுகின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**நீதி[illegible]**

கஞ்சாகுற்றச்சாட்டில்கைதுசெய்யப்பட்டுவிடுவிக்கப்பட்டவர்கள் மீண்டும் கஞ்சா குற்றச்சாட்டில் கைது செய்யப்படும் சம்பவங்களும் யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கஞ்சா வழக்கில் கைது செய்யப்படுபவர்கள் உண்மையிலேயே கஞ்சாவை விற்பனை செய்தார்கள், வைத்திருந்தார்கள் அல்லது நுகர்வோர் கண்டறியப்பட்டால், அது நிரூபணமானால் அவர்களுக்கு கடுமையான தண்டனைகளை நீதிமன்றங்கள் வழங்கவேண்டும். அப்போதுதான் அடுத்த முறை அது போன்ற காரியங்களில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். அத்துடன் கஞ்சா விற்பனையில் ஈடுபடுபவர்களும் அதைப் பார்த்து திருந்துவார்கள். அனைவருக்கும் நீதிமன்றங்கள் ஊடாக வழங்கப்படும் தண்டனைகள் பாடமாக அமைய வேண்டும். ஆனால் தற்போது குறைந்தபட்சம் 14 நாள்கள் விளக்கமறியல் மாத்திரமே விதிக்கப்படுகிறது. சிறியதொகை பணம் குற்றமாக அறவிடப்படுகிறது. எனவே போதைப்பொருள் பாவனை, விற்பனையில் ஈடுபடுபவர்கள் தப்பிக்க இது ஒரு வாய்ப்பாக அமைந்துவிடக்கூடாது என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர். (ம-21,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பற்ற கிணறுகளால் ஆபத்தின் நடுவே வாழ்க்கை

## *கிளிநொச்சி மாவட்டத்தில் அவலம்*

*கிளிநொச்சி, மார்ச் 21*

*வடக்கில் போரின் பின்னர் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படும் நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற கிணறுகள் தற்போதும் உள்ளன. அவற்றால் மக்கள் உயிராபத்தின் மத்தியில் வாழ்க்கையை நகர்த்த வேண்டிய சூழல் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.*





கிளிநொச்சி மாவட்டத்தில் கிணறுகள் ஆழம் கூடியவையாக இருப்பதுவழமை. இந்தநிலமையில் அங்கு பாதுகாப்பற்ற கிணறுகளே அதிகம் காணப்படுகின்றன. போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அவற்றைச் சீரமைத்துப் பாதுகாப்பான கிணறுகளாக மாற்றுவதற்குரிய பொருளாதார வசதிகள் இன்றி உள்ளனர்.

இந்தப் பாதுகாப்பற்ற கிணறுகளால் மக்கள் அச்சத்துடனேயே செயற்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. பாதுகாப்பற்ற கிணறுகளில் தவறி விழுந்து சிறுவர்கள் உயிரிழந்த சம்பவங்களும் இந்த மாவட்டத்தில் பதிவாகியுள்ளன. பாதுகாப்பற்ற கிணறுகளால் தமது பிள்ளைகளைச் சுதந்திரமாக விளையாட விடுவதற்குக் கூட அச்சப்பட வேண்டியுள்ளது என்று மக்கள் கவலை கொள்கின்றனர்.

இந்தக் கிணறுகளைச் சீரமைப்பதற்குத் தமக்குப் பொருளாதார வசதிகள் இல்லாத நிலையில், அவற்றைச் சீரமைப்பதற்கான உதவிகள் எவையும் கிடைப்பதில்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தந்தை ஒருவரின் வருமானத்தில்வாழும்குடும்பம்ஒன்று தமது இந்தப் பிரச்சினை தொடர்பாக விவரித்தது.

அந்தக் குடும்பத்தில் 16 வயதுக்கு உட்பட்ட 3 சிறார்கள் உள்ளனர். அவர்களது பேர்த்தியாரும் உள்ளார். தாய் குடும்பத்தின் பொருளாதார நிலயைக் கருத்தில் கொண்டு 3 ஆண்டுகளுக்கு முன்னர் அரபு நாடு ஒன்றுக்குச் சென்றுள்ளார். அதன்பின்னர் அவரது தொடர்புகள் அற்றுப் போயுள்ளன. தந்தை கூலி வேலை செய்கின்றார். அவர் அதிகாலை வேலைக்குச் சென்றால் மாலையே வீடு திரும்புவார். சிறார்கள் பேர்த்தியாரின் அரவணைப்பிலேயே வாழ்கின்றனர்.

இந்தக் குடும்பம் உபயோகிக்கும் கிணறும் பாதுகாப்பற்ற கிணறுதான். பேர்த்தியாருக்கு 70 வயதாகின்றது. சிறார்களும், பேர்த்தியாரும் நீராடுவது, குடிதண்ணீர் எடுப்பது அனைத்தும்இந்தக்கிணற்றில்தான். அந்தக் கிணறுக்கு பாதுகாப்பு சுவரோ, கப்பியோ இல்லை. கிணறு எப்போதும் பாறி விழலாம் என்ற நிலையே உள்ளது.

வயதான காலத்தில் தண்ணீர் எடுப்பது பெரும் சவாலான காரியமாகவே உள்ளது என்கிறார் பேர்த்தியார். சிறார்களைக் கொண்டு தண்ணீர் எடுப்பது என்றாலும் அவர்கள் தண்ணீர் எடுக்கும்வரை பெரும் அச்சத்துடனேயே இருக்க வேண்டியுள்ளது என்கிறார். சிறார்களின் தாய் வெளிநாட்டில் இருக்கின்றார் என்பதால் உதவிகள் வழங்குகிறார்கள் இல்லை. ஆனால் தாயிடம் இருந்து எந்த உதவிகளும் கிடைப்பதில்லை. தந்தையின் கூலித் தொழில் வருமானத்திலேயே வாழ்க்கை நகர்கின்றது என்று அவர் வேதனையோடு கூறுகின்றார்.

இவ்வாறான நிலமையே அந்த மாவட்டத்தின் பல இடங்களில் காணப்படுகின்றது. உரிய அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில்கொண்டுகிணறுகளைச் சீரமைக்க உதவ வேண்டும்என்றுமக்கள்கோரிக்கை விடுக்கின்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கேட்டோம். "கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் பாதுகாப்பற்றவையாகக் காணப்பட்ட 315 குடி தண்ணீர் கிணறுகள்சீரமைக்கப்பட்டுள்ளன." என்று அவர் கூறினார்.

"இந்தக் கிணறுகள் மீள்குடியேற்ற, நல்லிணக்க அமைச்சுக்கள் ஊடாகவும் சீரமைக்கப்பட்டுள்ளன. இவற்றை விட விவசாயத் திணைக்களம், கமநல சேவைத் திணைக்களம் என்பவற்றின் ஊடாகவும் பல விவசாயக் கிணறுகள் சீரமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நூற்றுக்கும் மேலான பாதுகாப்பற்ற கிணறுகள் உள்ளன என்பது உண்மையே. அவற்றைச் சீரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்." என்றும் மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.

உயிராபத்துக்கள் ஏற்படுவதற்கு முன்னதாக விரைவாகப் பாதுகாப்பற்ற கிணறுகளைச் சீரமைத்துத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-21,105)



## முல்லையில் வள்ளுவர் விழா

முல்லைத்தீவு, மார்ச் 21

முல்லைத்தீவு வித்தியானந்தாக்கல்லூரியில்திருவள்ளுவர் விழா கல்லூரி அதிபர் பொ. பொன்ராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதர் சங்கர் பாலச்சந்திரனும் சிறப்பு விருந்தினராகமுல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராசாவும் கலந்து சிறப்பித்தனர். சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தினர் வழங்கிய வள்ளுவர் காட்டிய வழியை வையகம் இன்று கைக்கொள்கின்றது கைக்கொள்ளவில்லை. என்ற பொருளில் அமைந்த பட்டிமண்டபம் இடம்பெற்றது. விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா, ந.ஐங்கரன், ஶ்ரீ.சிவஸ்கந்தஶ்ரீ, ஜீவா சஜீவன் ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் கலந்து கொண்ட இப் பட்டிமண்டபத்திற்கு நடுவராக தமிழ்ச்சங்கத் தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் பங்கேற்றார்.

திருவள்ளுவர் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகம் ஆதரவு வழங்கியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (க)

## இராணுவம் விடுவித்த காணியில் கொட்டப்படும் கழிவுப் பொருள்கள்



மன்னார், மார்ச் 21

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட திருக்கேதீச்சரம் நாவற்குளம் பகுதியில், இராணுவத்தின் வசமிருந்து கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட தனியாருக்குச் சொந்தமான காணியில் தற்போது இராணுவ கழிவுப்பொருள்களை கொட்டி தீ மூட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த காணி உள்ள இடம் சார்ந்த பகுதிகளில் தொடர்ச்சியாக சட்ட விரோத மண் அகழ்வுகளும் இடம் பெற்று வந்துள்ளன. இந்த நிலையில், காணியில் அப்பகுதியில் உள்ள இராணுவ முகாம் மற்றும் இராணுவ கவாலரண்களில் உள்ள இராணுவத்துக்குச் சொந்தமான முழு கழிவுப் பொருள்களும் கொண்டு வரப்பட்டு கொட்டப்பட்டு எரியூட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இராணுவத்தினர் பயண் படுத்திய உடைகள், தொப்பி, குறிப்பேடுகள், மருத்துவப் பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் கொட்டப்படுவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-56)



## அபிவிருத்தி உதவித் திட்டங்கள்

கிளிநொச்சி, மார்ச் 21

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான அபிவிருத்தி உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள 22 சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்காக 10 ஆயிரம் ரூபா காசோலையும், தூய்மையாக்கல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் வைத்து நேற்று முன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பச்சிலைப்பள்ளி பிரதேச சகைத் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேனின் ஆலோசனைக்கமைவாக பிரதேச சபையின் உப தவிசாளர் கஜனால் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் சபையின் செயலர் மற்றும் சனசமூக நிலையப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-6)



## பெட்டிப்பால வேலை ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 21

கரைச்சிப் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டு பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ரூபா 6 இலட்சம் பெறுமதியான முதலாவது பெட்டி பாலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் கருங்காலி வீதியில் முதலாம் ஒழுங்கையில் புதுக்காடு, ஆலடி ஆகிய கிராமங்களை இணைக்கும் இணைப்பு பால வேலை நேற்றுக் காலை 9.20 மணியளவில் தவிசாளர் அ.வேழமாலிகிதனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (க-222)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தின் மணவாளக்கோலம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணிக்கு மூலமூர்த்திக்கு பஞ்சகுண்டத்துடன் கூடிய ஆயிரத்தெட்டு சங்காபிசேகமும், பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிசேகமும் இடம்பெறும். மதியம் ஒரு மணியளவில்அன்னதானம்வழங்கப்படும். மாலை 5 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று பூந்தண்டிகையில் சுவாமி வீதி உலா வருதல் இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தெற்கு ஆபிரிக்காவில் மணிக்கு சுமார் 200 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய இடாய் புயலால் பல மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது.

## தண்டனை...

பேராபத்தை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பாச்லெட்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இந்த விவாதத்தில் இலங்கை தொடர்பில் தனது அதிருப்தியைத் தெரிவித்தார் ஐ.நா. ஆணையாளர் மிச்செல் பாச்லெட்.

கடந்தகால வன்முறைகளுடன் தொடர்புடையவர்களைத் தண்டனையில் இருந்து விடுவிப்பதானது சிறுபான்மை மக்களுக்கு எதிராக எதிர்காலத்தில் வன்முறைகளை அதிகரிக்கும் சாத்தியப்பாடுகளை உண்டு பண்ணுகிறது. அத்துடன் போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர்களை உயர் பதவிகளில் நியமிப்பது பொருத்தமற்றது. குறிப்பாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை படைகளின் பிரதானியாக நியமித்திருப்பது கவலைக்குரியது. போர்க் குற்றச்சாட்டுத் தொடர்பில் வெளிப்படையானதும் வினைத்திறனானதுமான விசாரணை மிகமிக அவசியமானது. இலங்கையில் சித்திரவதைகள் தொடர்கின்றன. ஐ.நா. சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஐ.நா. அறிக்கையை...

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இந்த நிலையில் ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமை, நல்லிணக்க பொறிமுறை தாமதிக்கப்படுகின்றமை, நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை செயற்படுத்தாமை தொடர்பாக ஐ.நா. ஆணையாளர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறித்த அறிக்கைக்கு இலங்கை சார்பில் பதிலளித்த அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, குறித்த அறிக்கையில் உள்ள சகல விடயங்களையும் ஏற்றுக்கொள்ள முடியாதென கூறியுள்ளார்.

ஐ.நா. பிரேரணையில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த கடந்த 2017ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசு கரிசனையுடன்செயற்பட்டுவருகின்றது என்று குறிப்பிட்ட திலக் மாரப்பன, காணாமல்போனோர் அலுவலகம் செயற்பட்டு வருகின்றமை தொடர்பாகவும் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை செயற்படுத்துவது தொடர்பாக காத்திரமான விடயங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடான சட்டத்தை கொண்டுவருவது தொடர்பான செயற்பாடுகள் நாடாளுமன்றில் முன்னெடுக்கப்படுகிறது. குறிப்பாக இவ்வருட வரவு செலவு திட்டத்தில் சிறப்புத் தேவையுடையவர்களுக்காக 500 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மனித புதைகுழி தொடர்பாக இதன்போது கருத்து வெளியிட்ட திலக் மாரப்பன, பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் இலங்கை காணப்பட்டிருந்த காலப்பகுதிக்குரிய என்புகளே அவை என்று அமெரிக்க நிறுவனம் அறிக்கை வழங்கியுள்ளது. இவ்வாறான நிலையில் அதனை வேறு விதமாக சித்தரிக்க முயல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென என்று தெரிவித்தார். கலப்பு நீதி மன்ற பொறிமுறைக்காக வெளிநாட்டவர்களை உள்வாங்க இலங்கை அரசமைப்பில் இடமில்லை. இலங்கை இராணுவத்துக்கு எதிரான போர்க் குற்றங்கள் நிரூபிக்கப்படாத பட்சத்தில் அவர்கள் பதவிகளில் அமர்த்தப்படுவதற்கு எதிராகக் குரல்கொடுப்பது அவர்களின் உரிமைகளைப் பறிக்கும் செயல் - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## வடக்கு...

சுரேன் ராகவன், முன்னாள் கடற்படைத்தளபதி ரியல் அட்மிரல் சரத்வீரசேகர ஆகியோருக்கு இடையில் சொற்போர் இடம்பெற்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து. இலங்கை அரசின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன கருத்துக்களை முன்வைத்தார். அது நிறைவடைந்த பின்னரேயே மேற்படி கருத்துமோதல் இடம்பெற்றது என்று சொல்லப்படுகின்றது.

இந்தச் சமயத்தில் குறுக்கீடு செய்த முன்னாள் கடற்படைத்தளபதி ரியல் அட்மிரல் சரத்வீரசேகர, பன்னாட்டுச் சமூகத்தின் முன் எமது சிப்பாய்களைக் காட்டிக்கொடுக்கும் செயற்பாடு தான் இங்கு நடைபெறுகின்றது. நாட்டின் அபிமானம், இறைமை பற்றி கருத்தில் கொள்வீர்களாயின் நிறைவேற்றப்படவுள்ள பிரேரணைக்கு இணை அனுசரணையை அரசு வழங்குவது ஏன்? இதன் மூலம் பன்னாட்டுச் சமூகத்திடம் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்ட எமது சிப்பாய்களை காட்டிக்கொடுக்கின்றீர்கள். அவர்களை ஏன் பலிக்கடாவாக்கின்றீர்கள்? என்றார்.

இதன்போது பதிலளித்த வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன், பன்னாட்டுச் சமூகம் எமது நாடு தொடர்பில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதாக நாம் எங்கும் கூறவில்லை. பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதன் மூலம் கூட அவ்வாறான ஒரு விடயத்தினை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. எமக்கு ஒவ்வாத விடயங்களை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றே கூறியுள்ளோம். பேரவையில் எமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு நான்கு நிமிடங்களே வழங்கப்படுகின்றது. ஆகவே எமது எழுத்துமூலமான வடிவத்தினை முழுமையாகப் பாருங்கள் அதில் நாம் தெளிவாகக் கூறியுள்ளோம் - என்றார். (ம-61)

## பன்னாட்டு...

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார.

களனிப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'போர் செயற்பாடுகளை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட தரப்பினர் தமது சுய அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்திக்கொண்டமையினாலேயே இன்று இலங்கை பன்னாட்டு விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் போர்க்காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பில் பன்னாட்டு விசாரணைகளில் இருந்து வெளியேற வேண்டுமானால் குற்றவாளிகள் மீதான உள்நாட்டு விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்' - என்றார். (22)

## தமிழர்...

வையின் 40ஆவது கூட்டத்தொடரின் நேற்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. ஐ.நா. பிரேரணையை நடைமுறைப்படுத்தாமை, நல்லிணக்கப் பொறிமுறை தாமதிக்கப்படுகின்றமை, நிலைமாறுகால நீதி பொறிமுறையை செயற்படுத்தாமை தொடர்பாக ஐ.நா. ஆணையாளர் மிச்செல் பாச்லெட் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டினார்.

குறித்த அறிக்கையை தொடர்ந்து உரையாற்றியபோதே இந்தியப் பிரதிநிதி இவ்வாறு வலியுறுத்தினார்.

இலங்கை எமது நட்புநாடு என்றவகையில் சகல விடயங்களிலும் இந்தியா துணை நிற்கும், குறிப்பாக தேசிய ஒற்றுமை, மனித உரிமை போன்ற விடயங்களில் அதிக கரிசனை கொண்டுள்ளோம். அத்தோடு, இலங்கையின் தமிழ் சமூகம் தொடர்பாக கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தது. (ம)

## ஐ.நா....

உறவு நீடிக்கும் என்று தெரிவித்தது ஐரோப்பிய ஒன்றியம். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் இலங்கை தொடர்பாக நேற்றுத் தனது உத்தியோகப்பூர்வ அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பாச்லெட் சமர்ப்பித்தார். அதனைத்தொடர்ந்து உறுப்பு நாடுகள், குறித்த அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்தன. இதன்போது ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி மேற்குறிப்பிட்ட விடயத்தை சுட்டிக்காட்டினார். இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாமல் உள்ளமை தொடர்பாக அதிக கரிசனை கொண்டுள்ளோம். பாதிக்கப்பட்டோருக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை தாமதமின்றி செயற்படுத்த வேண்டும். இவை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்படுவது அவசியம். அவ்வாறு இவ்விடயங்கள் செயற்படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரமே பன்னாட்டுச் சமூகம் இலங்கையுடன் இணைந்து செயற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆனல்ட்டுக்குக்...

கம்பன் விழாவுக்குச் செல்லவேண்டாம் எனவும் தமது எச்சரிக்கையை மீறிச் சென்றால் அங்கு வைத்துக் கொலை செய்வோம் எனவும் அலைபேசி ஊடாகக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டது என்று மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார். கடந்த 15ஆம் தனது அலைபேசிக்கு அழைப்பு எடுத்த நபர், இந்தக் கொலை மிரட்டலை விடுத்தார் என்று நேற்று முன்தினம் திங்கள்கிழமை யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் மாநகர முதல்வர் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். அத்துடன், தொலைபேசி இலக்கத்தையும் அவர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இந்தக் கொலைமிரட்டல் தொடர்பாக வடக்கு மாகாண மூத்த பொலிஸ்மா அதிபருக்கும் முதல்வர் இ.ஆனல்ட் அறிவித்துள்ளார். மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே இந்த முறைப்பாட்டை முதல்வர் வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டத்துக்குப் புறம்பாக கேபிள் கம்பங்களை நட்ட நிறுவனத் துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தமையால் அந்த நிறுவனத்தினர் மட்டுமே தனக்கு எதிரிகளாக உள்ளனர் என்றும் முதல்வர் விசாரணையில் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-106)

## படகு...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: யாழ்ப்பாணம் மண்டைதீவில் இருந்து நேற்றுப் பகல்வேளையில் இரு இளைஞர்கள் தொழில் நிமித்தம் பயணித்துள்ளனர். அவ்வாறு பயணித்து தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் கடலில் ஏற்பட்ட அதிக காற்றின் காரணமாகப் படகு கவிழ்ந்துள்ளது. அதிலிருந்த இருவரில் ஒருவர் நீந்திக் கரைசேர்ந்தார். இன்னொருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவரின் சடலம் ஏனைய மீனவர்களால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. இவ்வாறு உயிரிழந்த இளைஞனின் 19ஆவது பிறந்த தினம் நாளை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இடாய்' எனும் பேரழிவு!



வோஷிங்டன், மார்ச்.21

*தெற்கு ஆபிரிக்காவில் வீசிய 'இடாய்' புயலால் பல மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. தெரிவித்தது. மொசாம்பிக், சிம்பாவே, மலாவி ஆகிய மூன்று நாடுகளும் வெள்ளம் மற்றும் கடும் காற்றால் கடந்த சில நாள்களாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.*

இடாயின் நேரடிப் பாதையில் உள்ள மொசாம்பிக்கில் 1.7 மில்லியன் மக்களும், மாலாவியில் 9 லட்சம் மக்களும் பாதிக்கப்பட்டனர். சிம்பவேயில் 20ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன.


கடந்த வியாழக்கிழமையன்று மணிக்கு 177 கிலோமீற்றர் வேகத்தில் வீசியிருந்தது இந்தச் சூறாவளி. இந்தச் சூறாவளித் தாக்கத்தால் குறிப்பிட்ட நாடுகள் பேரழிவுகளை எதிர்நோக்கின. சாவடைந்தவர்களின் தொகை ஆயிரத்தையும் தாண்டியுள்ளது. சாவடைந்தவர்களைத் தவிர ஏராளமான மக்கள் வெள்ளம் மற்றும் சூறாவளியால் காயமடைந்துள்ளனர். தென்னாபிரிக்கப் பிராந்தியம் சந்தித்த மிக மோசமான இயற்கை இடர் என்று இடாய் சூறாவளியின் தாக்கத்தை ஐ.நா. வர்ணிக்கிறது.

ஆபிரிக்க நாடான மொசாம்பிக் அருகே கடலில் உருவெடுத்த சக்தி வாய்ந்த புயலுக்கே 'இடாய்' என்று பெயரிடப்பட்டிருந்தது. இது கரையைக் கடக்கும்போது கடுமையான அழிவை ஏற்படுத்துமென்றும் மணிக்கு சுமார் 225 கிலோ மீற்றர் வேகத்தில் கரையைக் கடக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்தப் புயலால் ஏற்பட்ட கடும் மழை காரணமாக மொசாம்பிக் மற்றும் மலாவியில் பலர் சாவடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.


## ஆப்கானில் 3700 ஆயுததாரிகள் சாவு!

காபூல், மார்ச்.21

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடக்குப் பகுதியில் மட்டும் ஓராண்டு காலத்தில் 3ஆயிரத்து 700வரையான ஆயுததாரிகளைக் கொன்று குவித்தாக அந்த நாட்டின் சிறப்புப் படையினர் தெரிவித்தனர். ஆப்கானின் வட பகுதியில் தலிபான்கள் மற்றும் பல்வேறு சிறிய ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் நிலவுகிறது. அந்த ஆயுததாரிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு அந்த நாட்டின் அதிபர் அஷ்ரப் கானி முழு அதிகாரத்தையும் வழங்கியுள்ளதன் பிரதிபலிப்பே இது என்று கூறப்படுகிறது.



சிரியாவில் ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும், சிரியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள பாகுஸ் என்ற பகுதியில் கடும் போர் நடப்பதாகவும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஐ.எஸ். ஆயுதாதாரிகள் தங்கள் பிள்ளைகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாகச் சிரிய அரச தரப்புத் தெரிவிக்கிறது. தொடர் வான் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக அந்தப் பிரதேசம் புகைமண்டலமாகக் காட்சி அளிக்கிறது.



வெனிசுலாவின் எதிர்க்கட்சித் தலைவரான குவைன் குவைடோவின் தூதர் கார்லோஸ் வெச்சியோ என்பவர் வோஷிங்டனிலுள்ள வெனிசுலாவின் இராணுவ அலுவலகம் ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த வெனிசுலா அதிபர் மதுரோவின் ஒளிப் படத்தைக் கழற்றிவிட்டு அதற்குப் பதிலாக அமெரிக்காவின் ஆதரவுடன் செயற்படும் குவைன் குவைடோவின் படத்தைச் சுவரில் மாட்டுகின்றார்.

## மியான்மார் இராணுவத்தினர் மீது 'அரகான்' போராளிகள் தாக்குதல்

யாங்கோன், மார்ச்.21

மியன்மாரிலுள்ள மிராக் யு நகருக்குள் இராணுவத்தினர் பயணித்த வாகனங்களைக் குறிவைத்து 'அரகான்' போராளிகள் துப்பாக்கித் தாக்குதல் நடத்தினர். இராணுவச் சிப்பாய்களும் பதில் தாக்குதல் நடத்தினர். சுமார் அரைமணி நேரம் இந்தத் தாக்குதல் சம்பவம் நீடித்தது. இதில் 6 இராணுவத்தினர் காயமடைந்ததாகத் தகவல் வெளியாகி உள்ளது. அந்தப் பகுதியில் இராணுவம் தேடுதலில் ஈடுபட்டுள்ளது.

**பின்னணி**

மியான்மரின் வடக்குப் பகுதியான ராக்கூன் மாநிலத்தில் வாழும் சிறுபான்மை ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது மியன்மாரின் பௌத்த பெரும்பான்மையினரும், மியன்மார் இராணுவமும் இணைந்து ஒடுக்கு முறைகள், மனித குல விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பெரும் துன்பங்களுக்கு மத்தியில் மியன்மாரிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறினர். இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வெளிப்படுத்த முயன்ற 'ரெய்டர்ஸ்' செய்தியாளர்கள் இருவரை மியன்மார் அரசு சிறைப்பிடித்தது. ஒடுக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்கள் 'அரகான்' எனும் அமைப்பாக ஒன்றிணைந்து மியன்மார் அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.



## முதல் மூன்று நகரங்கள்

லண்டன், மார்ச்.21

உலகின் விலைவாசி அதிகமாக இருக்கின்ற நகரங்கள் மற்றும் விலைவாசிக் குறைவாக இருக்கின்ற நகரங்களின் பட்டியலை 'த எக்கனாமிஸ்ட்' என்னும் பொருளாதார இதழ் வெளியிட்டது. இதில் சிங்கப்பூர், பாரீஸ், ஹொங்கோங் ஆகிய மூன்று நகரங்கள் விலைவாசி அதிகமுள்ள நகர்களாக ஒருசேர முதலிடத்தைப் பிடித்தன.

அதற்கடுத்த இடங்களைச் சுவிட்சர்லாந்தின் சூரிச், மற்றும் ஜெனீவா ஆகியன பிடித்தன. உலகிலுள்ள 133 நகரங்களில் வாழ்க்கைச் செலவினங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த நகரங்களில் சாதாரண உணவுப்பொருள்களின் விலைவாசி உயர்வை, அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரத்தின் வருடாந்த ஏற்ற இறக்கத்துடன் ஒப்பிட்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

பிரான்ஸின் தலைநகரான பாரீஸ் கடந்த ஆண்டு இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்த நிலையில், இந்த ஆண்டு முதலிடத்தைப் பிடித்துள்ளது. உலகின் விலைவாசி குறைந்த நகரங்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

உலகமெங்கும் பரவலாக நிலவிய பணவீக்கம், பணமதிப்பு காரணமாக ஆர்ஜென்டினா, பிரேசில், துருக்கி, வெனிசுலா ஆகிய நாடுகளின் விலைவாசி குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. இந்தப் பட்டியலில் வெனிசுவேலாவிலுள்ள கராகஸ் நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளது. மூன்றாமிடத்தில் உஸ்பேகிஸ்தானின் தாஷ்கண்ட் நகரம் இருக்கிறது.





## வெனிசுலா மீது இன்னும் தடைகள் விதிக்கப்படும்!

*ட்ரம்ப் எச்சரிக்கை*

வோஷிங்டன், மார்ச்.21

வெனிசுலா மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்தார். வெள்ளை மாளிகையில் பிறேசில் அதிபர் ஜெயிர் போல்சன்னாரோவுடன் பத்திரிகையாளர் சந்திப்பிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார். உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டாலும், அமெரிக்கா ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தடைகளாலும் வெனிசுலாவில் அரசியல் நிலையற்ற தன்மை, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு, உணவு - மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு எனப் பல நெருக்கடிகளை மக்கள் எதிர் நோக்கி வருகின்றனர். இதனால் அங்கு பெரும் மனித அவலங்கள் அரங்கேறி வருகின்றன. இந்த நிலையில் வெனிசுலா மீதான பொருளாதாரத் தடைகள் அதிகரிக்கப்படும் என்று ட்ரம்ப் கூறியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

'பிரெக்ஸிட்' விவகாரம்

## மீண்டும் வாக்கெடுப்புக்கு இடமில்லை சபாநாயகர் அதிரடியாகத் தெரிவிப்பு

லண்டன், மார்ச்.21

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் இழுபறியில் இருக்கின்ற 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் மீது 3ஆவது முறையாக வாக்கெடுப்பு நடத்த அனுமதி கிடையாது எனப் பிரிட்டனின் சபாநாயகர் ஜோன் பெர்கோவ் அதிரடியாக உத்தரவு பிறப்பித்தார். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் இந்த மாதம் 29ஆம் திகதியுடன் வெளியேறியாக வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிய பின்பு ஐரோப்பிய நாடுகளுடனான உறவு குறித்து அதற்கு முதலில் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. இந்த முயற்சியில் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேச மே ஈடுபட்டு வருகிறார். எனினும் அவர் முன்னைவ்கும் தீர்மானங்கள் நாடாளுமன்றில் தொடர் தோல்வியைச் சந்தித்து வருகின்றன.

அதேசமயம், பிரெக்ஸிட்டைத் தாமதப்படுத்தும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேறியது. எனினும் சிறப்பான ஓர் ஒப்பந்தத்துடன் ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறும் என நம்பிக்கை தெரிவித்துள்ள தெரசா மே, 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் மீது மீண்டும் வாக்கெடுப்பு நடத்த ஆலோசித்து வருவதாக கூறப்பட்டது. இந்த நிலையில், நாடாளுமன்றத்தில் 'பிரெக்ஸிட்' ஒப்பந்தம் மீது 3ஆவது முறையாக வாக்கெடுப்பு நடத்த அனுமதி கிடையாது எனச் சபாநாயகர் ஜோன் பெர்கோவ், அதிரடியாக அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியத் தேர்தல் களம்

# வேடிக்கையான கேள்விகளால் திணறுகிறது தேர்தல் உதவியகம்

தமிழகம்,மார்ச்.21

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்குப்பதிவு தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் நோக்கில் தேர்தல் உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



அந்தத் தேர்தல் உதவி மையங்களைத் தொடர்பு கொள்பவர்கள் வேடிக்கையான கேள்விகளைத் தொடுக்கின்றனர். வாக்குப்பதிவு தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்க மளிப்பதற்காகவும், முறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவும் இந்தத் தொலைபேசி உதவி மையங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த நிலையில், இந்த உதவி மையங்களுக்குப் பெரும்பாலும், தேர்தலுடன் தொடர்பு இல்லாத கேள்விகளுடன் கூடிய அழைப்புகளே அதிகம் வருவதாகக் கூறப்படுகிறது. உதாரணமாக, இந்த உதவி மையத்துடன் தொடர்பு கொண்ட ஒருவர், "தோடம்பழ மரக் கன்றுகள் என்ன விலை? அவை எங்கு கிடைக்கும்?" என வினவி யுள்ளார்.

மற்றொரு நபரோ, "எங்கள் கிரா மத்துக்கு எந்தக் கட்சி மின்சாரம் வழங்குமோ, அவர்களுக்கே நாங்கள் வாக்களிப்போம். இதனை அனைத்துக் கட்சிகளுக்கும் தெரிவித்து விடுங்கள்" என அதிகாரத் தொனியில் கூறியிருக்கிறார்.

இவ்வாறு, நாளொன்றுக்கு, நூற்றுக்கும் மேற்பட்ட அழைப்புகளில், தேர்தலுக்குத் தொடர்பு இல்லாத கேள்விகள் கேட்கப்படுவதாக அந்த உதவி மையத்தில் பணிபுரியும் அலுவலர்கள் தெரிவித்தனர்.

## பயிர்க்கடன்கள் தள்ளுபடி
### தி.மு.க. தெரிவிப்பு

சென்னை.மார்ச்.21

தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அனைத்து விவசாயிகளின் பயிர்க்கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் எனத் தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது.

எதிர்வரும் தேர்தலுக்கான தி.மு.காவின் தேர்தல் அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. கட்சியின் தலைவர் மு.க.ஸ்ராலின் இந்த அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் சிறு குறு விவசாயிகளின் பயிர்க்கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றிருந்தது.

5 ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்திருப்பவர்கள் சிறு குறு விவசாயிகள் என வரையறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தி.மு.காவின் தேர்தல் அறிக்கை அனைத்து விவசாயி களையும் திருப்தி செய்யும் வகையில் இருக்காது என்று கருத்துக்கள் கிளம்பின. இதையடுத்துக் குறித்த தேர்தல் அறிக்கையில் சிறு குறு விவசாயி களின் அனைத்து வகையான பயிர்க்கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என்று மாற்றம் செய்து வெளியிட்டது தி.மு.கா.

## 16 தடவைகள் தோற்றும் சளைக்காத சாமியார்!



லக்னோ,மார்ச்.21

இதுவரை 16 தடவைகள் தேர்தல்களில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த பக்கர் பாபா சாமியார், தொடர்ந்து 17ஆவது முறையாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார். உத்தரப்பிரதேசம் மதுராவில் உள்ள கடேஷ்வர் கோவிலின் தலைமைச் சாமியாராக இருந்து வரும் 73வயதுடைய இவர் நாடாளுமன்ற, சட்டசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வருகிறார். இதுவரை நாடாளுமன்றம், சட்டசபைத் தேர்தல்கள் 19வரையில் சுயேச்சையாக எதிர்கொண்ட இவர் அவை அனைத்திலும் தோல்வியையே சந்தித்தார். ஆனாலும் பின்வாங்காத இவர் எதிர்வரும் தேர்தலில் உ.பி.யின் மதுராத் தொகுதியில் 17வது முறையாக போட்டியிடுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



## பா.ஜ.க.வுக்கு கடும் பின்னடைவு 25 தலைவர்கள் திடீர் விலகல்

புதுடெல்லி,மார்ச்.21

மக்களவைத் தேர்தல், சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டதை அடுத்து, கடந்த சில நாள்களில் இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் பா.ஜ.காவில் இருந்து 25க்கும் மேற்பட்ட தலைவர்கள் திடீரென விலகினர்.

மக்களவைத் தேர்தல் வரும் நிலையில் அதிகளவு நிர்வாகிகள் விலகியது பா.ஜ.காவுக்குப் பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

விலகியவர்கள் அனைவரும் மேகாலயா முதல்வர் கான்ராட் சங்மாவின் தேசிய மக்கள் கட்சியில் இணைந்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் ஏற்கெனவே போட்டியிட்ட பலருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளமையே இந்த விலகல்களுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் பா.ஜ.காவின் பொதுச்செயலாளர் ஜர்பும் காம்பின், உள்துறை அமைச்சர் வெய், சுற்றுலாத்துறை அமைச்சர் ஜார்கர் காம்லின், 6 எம்எல்ஏக்கள் ஆகியோர் விலகியவர்களில் மிகவும் முக்கியமானவர்கள் என்பதாக அரசியலவதானிகள் கருத்துரைக்கின்றனர்.



## நாம் தமிழர் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னம்

தமிழகம்,மார்ச்.21

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சியானது கரும்பு விவசாயி சின்னத்தில் போட்டியிடவுள்ளது. இதை அந்தக் கட்சியின் தலைவர் சீமான் வெளியிட்டார். அத்துடன் எதிர்வரும் 23ஆம் திகதி நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் விவரம் வெளியிடப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

எதிர்வரும் தேர்தலில் விவசாயம் தொடர்பான சின்னத்தை ஒதுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்குச் சீமான் கோரிக்கை விடுத்த நிலையில், அவருக்குக் கரும்பு விவசாயி சின்னம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



## இன்றைய நாள்

**மேடம்:** பொது இடங்களில் அதிகம் பேச வேண்டாம். தொழிலில் பணிச் சுமை அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.

**இடபம்:** சிலரது பேச்சு உங்கள் மனதை கஷ்டப்படுத்தலாம். குடும்பத்தினரின் ஆலோசனை நம்பிக்கையளிக்கும். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணவரவு மிதமாக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பணியாளர்கள் பணிவிஷயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** உதவி பெற்றவரும் உதாசீனமாக நடக்கலாம். தொழில்வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் முயற்சி தேவை. அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையை திறம்பட சமாளிப்பர்.

**சிம்மம்:** குடும்பத்தினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். விரும்பிய உணவு வகைகளை உண்டு மகிழ்வீர்கள்.

**கன்னி:** சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமார். பணியாளர்கள் நிர்வாகத்தின் அச்சுறுத்தலுக்கு ஆளாகலாம்.

**துலாம்:** மனம் தெளிந்த நீரோடை போல இருக்கும். தொழில் வியாபாரம் செழித்து நன்மை காண்பீர்கள். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் மேலோங்கும். தாமதமான பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.

**தனுசு:** சொல்லும், செயலும் முரண்படலாம் கவனம். தொழில் வியாபா ரத்தில் முன்னேற்றம் வாய்ப்பு உருவாகும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். . பணம் செலவு செய்ய வேண்டாம்.

**மகரம்:** செயல்களில் அனுகூலம் பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். .தொழிலில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும்.

**மீனம்:** திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் உண்டாகும். லாபம் அதிகரிக்கும். புதிய வீடு வாகனம் வாங்க வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை வி.கவை வீழ்த்தியது ஊரெழு றோயல் வி.க.

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தியது.

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழ்ப்பாண மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டத்தின் முதலாவது பாதியில் 18ஆவது நிமிடத்திலேயே ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி தனது முதலாவது கோலைப் பதிவு செய்தது. வேறு எந்த கோல்களும் முதல் பாதியில் பதிவு செய்யப்படவில்லை. இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல்களைப் பதிவு செய்ய முயன்ற போதும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. ஆட்ட நேர இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் அணி வெற்றி பெற்றது.

(ஒ.23,ரி1)





## பெண்களுக்கான கால்பந்தாட்டம் சாதித்தது செட்டிக்குளம் ம.வி.

வவுனியா, மார்ச் 21

ஸ்கந்தபுரம் வாணி மகா வித்தியாலய அணியை 2:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி.

வவுனியா மாவட்ட பாடசாலை கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் எம்.ஜீவன் நினைவு வெற்றிக் கிண்ணத்துக்கான 14 வயதுப் பிரிவு இரு் பாலருக்குமான கால்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில், செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

வவுனியா நகர சபை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. செட்டிக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து, ஸ்கந்தபுரம் வாணி மகா வித்தியாலய அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றது செட்டிக்குளம் மகா வித்தியாலய அணி. (ஒ.23)

## இன்றைய ஆட்டங்கள்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும், வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் திக்கம் இளைஞர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

✦ ✦ ✦

கம்பர் மலை கலை வாணி சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்து அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று வியாழக் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)



## இளங்கதிரை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது ரேவடி ஐக்கிய வி.க.

யாழ்ப்பாணம், மார்ச் 21

வல்லை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் 72ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, வல்லைக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது ரேவடி ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் வல்லை ரேவதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வல்லை இளங்கதிர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணிகளாலும் இறுதிவரையில் கோல் எதையும் பெற முடியவில்லை. ஆட்டத்தின் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் ரேவடி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது. (ஒ.23)

## இறுதிக்குள் நுழைந்தது சைனிங்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், மார்ச் 21

சமநிலை தகர்ப்பு உதையில் 4:3 என்ற கோல் கணக்கில் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம்.

வல்லை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகம் 72ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு, வல்லைக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரை நடத்தி வருகின்றது.

கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் வல்லை உதயசூரியன் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்துவல்லைசைனிங்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இரண்டு அணிகளும் சிறப்பாக ஆடின. இரண்டு அணியினருமே தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்தனர். ஆட்டம் சமநிலையில் நிறைவுக்கு வந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

(ஒ.23)

## சமநிலையில் முடிந்தது ஆட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் சமநிலையில் முடிவடைந் தது.



நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பதிவு செய்யவில்லை. ஆட்டம் சமநிலையில் முடிவுக்கு வந்தது.

(ஒ.23)



## பெண்களுக்கான எல்லே விக்னேஸ்வரா சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான எல்லேப் போட்டியில் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான எல்லேத் தொடரின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ந்பெற்றது.

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியால அணியை எதிர்த்து உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 30 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரமே பெற்றது. வெற்றிக்கு 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களமிறங்கிய வாதரவத்தை விக்னேஸ்வரா அணி, 28 பந்துகளில் 2ஓட்டங்களைப்பெற்றுவெற்றியைத்தனதாக்கியது. (ஒ.422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரபரப்பான ஆட்டத்தில் இலங்கை தோல்வி




இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் போட்டியை இலங்கை அணி கைப்பற்றியது. ஒருநாள் போட்டியை தென்னாபிரிக்கா அணி கைப்பற்றியது. இரு அணிகளுக்குமிடையில் மூன்று ரி-20 போட்டிகளைக் கொண்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ரி-20 போட்டியில் தென்னாபிரிக்கா அணி சுப்பர் பந்துப்பரிமாற்ற அடிப்படையில் 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் இலங்கை அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டிக்வெல, பெர்னாண்டோ களமிறங்கினர். அணி ஓட்டமெதனையும் பெறாத நிலையில் டிக்வெல வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார். அணி 100 ஓட்டங்களுக்குள் 5 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதிகபட்சமாக கிமுன்டி மென்டிஸ் 41 ஓட்டங்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் பெலுக்குவையோ 3 இலக்குகளையும், ஸ்ரெயின், ரபாடா, தாஹீர், சிப்பம்லா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 135 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டி குக், ஹன்றிக்ஸ் களமிங்கினர். அணி 21 ஓட்டங்களைப் பெற்ற போது ஹன்றிக்ஸ் ஆட்டமிழந்தார். அதிகபட்சமாக மில்லர் அதிரடி காட்டி 23 பந்துகளில் 41 ஓட்டங்களையும், டுசன் 34 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப் பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற ஆட்டம் சமநிலையானது.

இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு பந்துப் பரிமாற்றங்கள் மூலம் சுப்பர் பந்துப்பரிமாற்றங்கள் வழங்கப்பட முதலில் ஆடிய தென்னாபிரிக்கா அணி 14 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய இலங்கை அணியால் 4 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால் தென்னாபிக்கா அணி 10 ஓட்டங்கள் வெற்றி பெற்றது.

உலகக் கிண்ண ஒப்பந்தத்தின் அடிப்படையில்

## இந்தியா - பாகிஸ்தான் போட்டி இடம்பெறும்

ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அணி பாகிஸ்தானுடன் உலகக் கிண்ணத்தில் விளையாடவேண்டும் என்று பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

புல்வாமாவில் இந்திய இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் பாகிஸ்தான் அணியுடன் எந்த விதமான விளையாட்டுக்களிலும் ஈடுபட மாட்டோம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர்களும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் அறிவித்தது.

இந்த நிலையில் ஒப்பந்தத்தின்படி உலகக் கிண்ணத்தில் இந்திய அணி பாகிஸ்தானுடன் விளையாட வேண்டும் என்று பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்[illegible]. இது தொடர்பாக பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைமை நிர்வாக அதிகாரி ரிச்சர்ட்சன் தெரிவிக்கையில்;

பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தும் போட்டிகளில் பங்கேற்பது தொடர்பாக அனைத்து நாட்டு உறுப்பினர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்தியிட்டு உள்ளனர்.

2019 உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுடன் விளையாட இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது. அவ்வாறு விளையாடாமல் போவது விதிமுறைக்கு மாறானது. ஒரு அணி மற்ற அணிகளுடன் விளையாடாமல் போனால் அதற்கான புள்ளிகள் எதிர் அணிக்கு வழங்கப்படும்.

நாங்கள் விளையாட்டுடன் அரசியலை கலக்க விரும்பவில்லை. இது பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தெளிவான குறிக்கோள் ஆகும் - என்றார்.

## நெருக்கடி இல்லாத தலைவர் கோக்லி

*வசைபாடினார் அனில் கும்ளே*

இந்திய அணியின் அணித் தலைவர் விராட் கோக்லி மிகவும் வசதியாக இருப்பதற்கு முன்னாள் அணித் தலைவர் டோனி உதவி புரிகிறார் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் அனில் கும்ளே தெரிவித்தார்.

இந்திய அணியின் சாதனைத் தலைவனாக விளங்கியவர் டோனி. டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்ற அவர் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் அணிக்கான அணித் தலைவர் பதவியில் இருந்து விலகினார்.

தற்போது கோக்லி மூன்று வகை கிரிக்கெட்டிலும் அணித் தலைவராக திகழ்ந்து வருகிறார். ஒருநாள் மற்றும் ரி-20 போட்டியில் கோக்லி துணைத் தலைவராக ரோகித், டோனி ஆகியோருடன் முக்கியமான கட்டத்தில் ஆலோசனை கேட்பதை வழக்கமாக கொண்டுள்ளார்.

முக்கியமான கட்டத்தின் இறுதிப் பந்துப்பரிமாற்றங்களின் களத்தடுப்பை அமைக்கும் பொறுப்பை டோனியிடம் கொடுத்துவிட்டு, மைதானத்தின் எல்லைக் கோட்டின் அருகே எந்த வித நெருக்கடியும் இல்லாமல் கோக்லி நிற்பார்.

இதுகுறித்து கும்ளே தெரிவிக்கையில்;

கோக்லி சிறந்த அணித் தலைவர் என்பதை விட, மிகவும் வசதியான அணித் தலைவராகவே இருக்கிறார் என்று நினைக்கிறேன். டோனி ஸ்டம்புக்குப் பின்னால் நிற்கும்போது கோக்லி மிகவும் வசதியாக வலம் வருகிறார். அவருக்கும் டோனிக்கும் இடையிலான பேச்சு, சரியான முடிவை எடுக்க கோலிக்கு உதவுகிறது- என்றார்.



## அருங்காட்சியகத்துக்கு தனது விருதுகளை வழங்குகிறார் முரளி

இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தான் பெற்ற ஆட்ட நாயகன் விருதுகளை 'குட்னஸ்' தொண்டு நிறுவனத்துக்கு வழங்கவுள்ளார்.

19 வயதிலிருந்து கிரிக்கெட் அரங்கில் தான் பெற்ற ஆட்ட நாயகன் விருதுகள் அனைத்தையும் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்மூலம் சீனிகமவில் அமைந்துள்ள 'குட்னஸ்' தொண்டு நிறுவனத்தின் தலைமையகத்தில் முத்தையா முரளிதரன் அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது.

இதற்காகவே தனது அனைத்து ஆட்ட நாயகன் விருதுகளையும் முரளிதரன் வழங்கவுள்ளார்.





இந்தியன் வேல்ஸ் ரென்னிஸ் தொடர்

## டொமினிக் திம், ஆன்ட்ரீஸ்கு கிண்ணத்தை சுவீகரித்தனர்

இந்தியன் வேல்ஸ் பன்னாட்டு ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் டொமினிக் திம் வெற்றி பெற்றார். பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் பியான்கா ஆன்ட்ரீஸ்கு வெற்றி பெற்றார்.

இதில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் - ஆஸ்திரியாவைச் சேர்ந்த டொமினிக் திம்மை எதிர் கொண்டார்.

இதில் திம் 3:6,6:3,7:5 [illegible] பெற்று கிண்ணத்தை [illegible] 100ஆவது பட்டத்தை வென்று சாதித்து இருந்த பெடரர் 6ஆவது முறையாக இந்தக் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை நழுவ விட்டார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜேர்மனியைச் சேர்ந்த ஏஞ்சலிக் கெர்பர் கனடா நாட்டு வீராங்கனை பியான்கா ஆன்ட்ரீஸ்குவை சந்தித்தார்.

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் பியான்கா ஆன்ட்ரீஸ்கு 6:4, 3:6, 6:4 என்ற நேர் செற் கணக்கில் ஏஞ்சலிக் கெர்[illegible] அளித்து முதல் முறையாக சம்பியன் பட்டத்தை சொந்தமாக்கினார் பியான்கா ஆன்ட்ரீஸ்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணப் போட்டியை இந்தியா புறக்கணிப்பது கடினம்

## கம்பீர் தெரிவிப்பு

ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அணி பாகிஸ்தான் அணியுடன் உலகக் கிண்ணத்தில் விளையாட வேண்டும் என்று பன்னாட்டுக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர் பாகிஸ்தான் அணியுடன் இந்திய அணியினர் உலகக் கிண்ணத் தில் விளையாடாமல் போட்டியை புறக்கணித்தால் இந்திய மக்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

புல்வாமாவில் இந்திய இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் பாகிஸ்தான் அணியுடன் எந்தவிதமான விளையாட்டுக்களிலும் ஈடுபட மாட்டோம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர்களும், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் அறிவித்தது.



இதனை பரிசீலித்த பன்னாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அணி பாகிஸ்தான் அணியுடன் விளையாட வேண்டும் என்று அறிவித்தது.

இந்த நிலையில் கம்பீர் கருத்து தெரிவிக்கையில்;

பாகிஸ்தானுக்கு எதிராக நிபந்தனையற்ற தடை விதிக்க முடியாது என்பதை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்.

பாகிஸ்தானுக்கு எதிராக எந்தவொரு போட்டியிலும் விளையாடக்கூடாது. அல்லது அவர்களை எதிர்த்து விளையாட கதவை திறந்து வைக்க வேண்டும். பாகிஸ்தானுக்கு எதிரான உலகக் கிண்ணத்தில் ஆட்டத்தை புறக்கணிப்பது கடினம் என்பதை என்னால் உறுதியாக கூற முடியும். ஆனால், நாம் பாகிஸ்தானுக்கு எதிராக இருநாடுகளுக்கு இடையிலான தொடரில் விளையாடுவதில்லை. அதேபோல் ஆசியக் கோப்பையிலும் விளையாடாமல் இருக்க முடியும்.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் விளையாடாமல் இரண்டு புள்ளிகளை இழப்பதில் எந்தத் தவறும் இல்லை. பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா விளையாடாது என்று முடிவு எடுத்துவிட்டால், ஒட்டுமொத்த நாட்டு மக்களும் அணிக்கு ஆதரவாக இருக்க வேண்டும். இறுதி போட்டியில் பாகிஸ்தானுடன் மோத வேண்டும் என்றாலும், அதை புறக்கணிக்க வேண்டும். அதற்கு மக்கள் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்- என்றார்.


**தேவை**

யாழ். நகர் பகுதியிலிருந்து சுமார் 5 Km சுற்று வட்டாரத்திற்குள் குறைந்தது 1000 சதுர அடிகள் விஸ்தீரணம் உடைய களஞ்சிய அறை உடன் தேவை. வீடுகளை களஞ்சிய அறையாகக் கொடுக்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு - 076 137 9367

**அலுவலர் தேவை**

கணினி வேலை, கணக்கு வேலை, கடித தொடர்பாடல் செய்யக் கூடிய அனுபவம் உள்ளவர் தேவை. கிராம அலுவலரின் நற்சான்றுப் பத்திரத்துடன் வரவும். (CS 24113) (14.17)

K.S.பொன்னம்பலம் & சன்
எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி.
021 205 7005

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

அனைத்து **HONDA** மோட்டார் சைக்கிள்களிற்கும்

பதிவுக்கட்டணம் இலவசம்

தெரிவுகளுக்கு முந்துங்கள்

இச்சலுகை

RATNAM BROTHERS
No. 291, STANLY ROAD,
JAFFNA.

HONDA

021 222 6185, 021 222 9231,
077 734 0056

(CS. 24145)(13.17)

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 23.03.2019
சனி, ஞாயிறு வகுப்புகள்
காலை 08-10 மாலை 03-05
வாரநாள் வகுப்புகள் (செவ்வாய் வியாழன்) 21.03.2019
காலை 08.30 - 10.00 மாலை 03-4.30

SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 20.03.2019 | 2481 | பச்சை |

மகரம் வெற்றி இலக்கங்கள் 04 19 34 56

வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=

21.03.2019 ம் திகதி வியாழக் கிழமை மண்ணிற நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்:3163 திகதி:2019.03.20 புதன்கிழமை

SATURDAY FORTUNE ஊதா

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 23 29 30 42 S
போனஸ் இலக்கம்: 59
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 35,266,575/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 560
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.20

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,791,450/-

வெற்றி இலக்கங்கள் 35 55 58 62 ஆங்கில எழுத்து K

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**සංවර්ධන වාසනාව**
அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 231
சீட்டிழுப்பு திகதி 20.03.2019 நீலம்

ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 44 48 62
விதி எண் 07

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14, 613, 372/=

2019.03.23 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

**அதிகம் செலுத்தி குறைவான பிரதிலாபத்தை பெறுவது ஏன்?**

இன்றே அழையுங்கள் 011 750 1000

www.takaful.lk

Amana Takaful டுக் டுக் FULL

முச்சக்கர வண்டிக் காப்புறுதி

- விபத்து நிகழ்ந்து முறையே வருமான தடங்கலின்போது நாளொன்றுக்கு ரூ.1,000/-
- வைத்திய அனுமதியின்போது நாளொன்றுக்கு ரூ.750/-
- இதயநோய் போன்ற 38 வகையான தீவிர நோய்களுக்கு ரூ.100,000/-
- பூரண அங்கவீனம் ஏற்படின் ரூ.300,000/-
- இயற்கை மரணம் நிகழும்போது ரூ.300,000/-

Amana Takaful SRC ஸ்மார்ட் ரைடர் COVER There's nothing like it...

மோட்டார் சைக்கிள் காப்புறுதி

- வைத்தியசாலை அனுமதியின்போது நாளொன்றுக்கு ரூ.750/-
- இதயநோய் போன்ற 38 வகையான தீவிர நோய்களுக்கு ரூ.100,000/-
- பூரண அங்கவீனம் ஏற்படின் ரூ.300,000/-
- இயற்கை மரணம் நிகழும்போது ரூ.300,000/-

மேலும் ஏராளமான வரப்பிரசாதங்கள்

ATL அமானா தகா:புல் காப்புறுதி

அனைவருக்காகவும் திறந்துள்ளது

MADISON AVENUE


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org